Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU




முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (08.07.2012) பக்கங்கள் 20 | ஓசை – 281
















# கிழக்கு மாகாண சபைத் தேர்தல்
# கூட்டமைப்பில் வெடித்தது குழப்பம்

## தமிழரசுக் கட்சியால் வந்தது சிக்கல்



(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றம் செய்யப்படாவிட்டால் அந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் அந்தத் தேர்தலுக்காக 14 வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளிடம் தலா ஒரு வேட்பாளரை வழங்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏனைய பத்து வேட்பாளர்களும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்களே உள்வாங்கப்படவுள்ளனர். இந்த வேட்பாளர் தெரிவுக்கு ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற 4 கட்சிகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதோடு ஒவ்வொரு கட்சியிலிருந்தும் இரண்டு வேட்பாளர்களைத் தெரிவு செய்தால் மொத்தம் 8 வேட்பாளர்கள் ஏனைய கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

மிகுதி 6 பேரை மட்டும் தமிழரசுக் கட்சியிலிருந்து தெரிவு செய்யுமாறு கோரிக்கை விடுத்த போதிலும், இதுவரையில் எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை

(19) ஆம் பக்கம் பார்க்க

## மற்றொரு அகதிகள் படகு அவுஸ்ரேலியா சென்றது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மற்றொரு அகதிகள் படகு நேற்றைய தினம் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை அடைந்துள்ளது.

இந்தப் படகில் 31 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 32 பேர் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பயணம் செய்த சிறிய மீன்பிடிப்படகு நேற்று முன்தினம் மாலை அவுஸ்ரேலிய கண்காணிப்பு விமானத்தினால் அடையாளம் காணப்பட்டு இடைமறிக்கப்பட்ட

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்கும்

### அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இணைந்து கொள்ளுமென அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புகவெல தெரிவித்துள்ளதாவது,

(19) ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலுக்குச் சென்ற நால்வரைக் காணவில்லை

### வடமராட்சி கடற்பகுதியில் சம்பவம்

(பொலிகண்டி)

பருத்தித்துறையில் கடற்றொழிலுக்குச் சென்ற நால்வர் கடந்த இரண்டு நாட்க ளாக வீடு திரும்பாத நிலையில் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

மயிலிட்டி மீனவ சங்கத்தைச் சேர்ந்த கற்கண்ட கடம்பராசா (வயது-40), தங்கராசா ஜெகதீஸ்வரன் (வயது-35), பலாலி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அருளப்பு அரசரத்தினம் (வயது-22) இன்பர்சிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த துரைசிங்கம் பிரதாப் (வயது-27) ஆகிய நால்வருமே வீடு திரும்பவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்பை கண்டித்து மன்னாரில் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நடை முறையில் உள்ள மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை, வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளமை, தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கைதி ஒருவர் உயிரிழந்தமை போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்து மன்னார் பிரதேச மக்கள் நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். மன்னார் நகரிலுள்ள சிறுவர் பூங்கா வளாகத்திலிருந்து

(19) ஆம் பக்கம் பார்க்க



## வடமாகாண பாடசாலை மெய்வல்லுநர் முதலிடம் பிடித்தது யாழ்.மாவட்டம்




(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்டம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

வடக்கு மாகாணப் பாட சாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த நான்காம் திகதி முதல் நேற்று வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெரு விளையாட்டுக்கள் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் கிடைக்கப்பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். மாவட்டம் 2175 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், 576 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டம் இரண்டாமிடத்தையும், 475 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டம் மூன்றாமிடத்தையும், 214 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டம் நான்காமிடத்தையும், 142 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி

(19) ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கிற்கான உதவிகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கிற்கான உதவிகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நன்கொடையாளர்களின் உதவிகள் குறைவடைந்து செல்வதாக குறிப்பிட்டுள்ளது.

மிக அத்தியாவசியமான தேவைகளான உணவு, உறையுள், பாதுகாப்பு மற்றும் போசாக்கு போன்றன முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைச்சட்ட வழக்கு 2 இளைஞர்கள் மீது 196 குற்றச்சாட்டு

(திருநெல்வேலி)

இரண்டு பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளில் இரண்டு இளைஞர்களுக்கு எதிராக 196 குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி சறோஜினி புசலா அபயவர்த்தன முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2008 ஆம் ஆண்டு ஆனி மாதம் 6ஆம் திகதி மொறட்டுவ கட்டுப்பெத்தவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாணந்துறை நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் இருவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சமூகத்துடன் இணைந்துவாழ வலுவிழந்தோருக்கு வரப்பிரசாதம்

## யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு அரச அதிபர் பாராட்டு



(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் வலுவிழந்தோர் சாதாரண பிரஜைகளுடன் இணைந்து வாழும் வகையில் ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் தயார்ப்படுத்தப்பட்டு வருவது அவர்களுக்குக கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் என்று யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். ஜெயப்பூர் நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில அரச அதிபர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இங்கு பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆனாலும் வலுவிழந்தோர் சம்பந்தமாக நடததப்படும் இந்த விழாவில் கலந்து கொண்டு ஒரு விநாடியேனும் கழிப்பது மேலானதாகத் தெரிவித்த அவர், யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வெள்ளிவிழாவை ஒட்டி மாற்று வலுவுடையோரிடையே நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் நிகழ்வுகளைப் பார்க்கின்றபோது அவர்கள் எமது சமூகத்துடன் இணைந்து வாழக் கூடிய விதத்தில் எவ்வாறு ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் தயார்ப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது புரிகின்றது. அவர்களின் திறன் விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. சமூகத்தில் வலுவிழந்தோர் என்று ஒதுங்கியிருக்காது அவர்களும் தமது திறமைகளைப் பல்வேறு சாதனைகளில் நிரூபித்தும் வருகின்றனர். அவர்களுக்கு 25 வருடகால சேவைகளை இந்த நிறுவனம் ஆற்றிவருகின்றது. அந்த வகையில் இந் நிறுவனம் அவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சமூகசேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி சில்வெஸ்ரர், யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், ஜெய்ப்பூர் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி தெய்வேந்திரன் மற்றும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள், பயனாளிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (பா)

# வெடிபொருட்கள் புத்தூரில் மீட்பு

புத்தூர் மேற்கு கின்புசிட்டிப் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் உள்ள மதியாபரணம் என்பவரது மகன் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றபோது துப்பாக்கிச் சன்னம் ஒன்றை கிணறுக்கு அருகில் கண்டுள்ளார். குறித்த சன்னத்தை எடுக்க முற்பட்டபோது அது சங்கிலியாக இணைக்கப்பட்ட பல துப்பாக்கிச் சன்னங்களாக இருந்தது.

உடனடியாக நிலாவரைப் பகுதியில் கடமையில் இருந்த இராணுவத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மாலை 6.30 மணியளவில் ஸ்தலத்திற்கு விரைந்த இராணுவத்தினர் துப்பாக்கிச் சன்னங்கள், இரண்டு ரவைக் கூடுகள அத்துடன் கைக்குண்டு மற்றும் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றையும் மீட்டுச் சென்றுள்ளனர்.

# ஆட்டோ விபத்து; உரிமையாளர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு ஆட்டோ - கன்ரர் வாகன விபத்தில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்ததுடன் ஆட்டோவும் கடுமையாகச் சேதமடைந்தது. நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த யூனைதீன் முகமட் மன்சூர் (வயது-35) என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த மானிப்பாய் வீதியில் நேர் எதிரே வந்த கன்ரர் வாகனம் இவரது ஆட்டோவைத் தட்டிவிட்டதனைத் தொடர்ந்து ஆட்டோ விபத்தில சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# பாடசாலை மாணவர்களின் புகைப்பட, சித்திரக் கண்காட்சி



தொண்டைமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் புகைப்படம் மற்றும் சித்திரக்கண்காட்சி நேற்று இடம்பெற்றது.

குறித்த பாடசாலையில் ஒரு பகுதி மாணவர்கள் மற்றும் சில ஆசிரியர்களை இணைத்துக் கடந்த இரண்டு வாரகாலமாக பீஸ் கேன் (peace gane) எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியின்போது, தொணடைமானாறு பிரதேசத்தை மையமாகக்கொண்டு அப்பிரதேசத்தின் பலம், பலவீனம் என்பவற்றை அடையாளம் கண்டு அவற்றைப் புகைப்படங்களாகவும், சித்திரங்கள் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டன. குறித்த படங்களுக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விளக்கங்களும் எழுதப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

மாணவர்கள் தம்மைச் சூழவுள்ள வளங்களை இனங்காணவும், தமது பிரதேசத்தின் பலம், பலவீனங்களை அடையாளம் காணவும் மேற்படி செயற்பாடு மிகப் பயனுள்ள வகையில் உதவியதாகப் பங்குபற்றியவர்கள் கருத்துத் தெரிவித்தனர். நேற்றைய கண்காட்சியில் நூற்றுக்கு மேற்பட்ட படங்களும் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (17)

# வேள்விக்குத் தடைவிதித்தது நீதிமன்றம்



நீர்வேலி மேற்கு மலை வைரவர் ஆலயத்தில் நேற்று நடைபெறவிருந்த வேள்வி நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக இந்த ஆலயத்தில் வேள்வி இடம்பெற்றுவந்த வேளையிலும் தற்போது இந்த ஆலயத்தில் வேள்வி நடைபெறுவதை தடைசெய்யவேண்டும் என அந்த ஊரில் உள்ளவர்களில் ஒரு பகுதயினர் கேட்டுக்கொண்ட நிலையில் இந்த பிணக்கு கோப்பாய் பொலிஸாரினால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் நீதிமன்றம் வேள்விக்கு இடைக்கால தடை உத்தரவை வழங்கியுள்ளது. இதனால் நேற்று கோவிலுக்கு வெட்டுவதற்காக கொண்டுவரப்பட்ட கிடாய்கள் வெட்டாது மீளவும் ஆலயத்தில் தண்ணீர் தெளித்துவிட்டு உரியவர்களினால் வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டது.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

து.அருளானந்தம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (820785185V), சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்திற்கும் சங்கானைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்துதவவும். (C/1618)

தொடர்புகளுக்கு :- 0771874502

### வேலையாட்கள் தேவை

பூநகரி பரம்பன்கிராயிலுள்ள தென்னந்தோட்டத்திற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு 60 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (R/145)

தொடர்புகளுக்கு :- அ.வரதராஜன் - 0776692891

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டலில் எமது பாரதி சனசமூக நிலையத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா நிதி உதவி வழங்கிய கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன் தோழர்) அவர்களும் மற்றும் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ் தோழர்), சாவகச்சேரி பிரதேச அமைப்பாளர் ஏ.எஸ்.வலன்ரைன் தோழர் மற்றும் கொடிகாமம் பிரதேச அமைப்பாளர் விசுவா தோழர் ஆகியோருக்கும் எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களது மக்கள் சேவை மேலும் தொடரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.





வாழ்த்துவோர்

பாரதி சனசமூக நிலைய நிர்வாகமும் பிரதேச மக்களும் வேம்பிராய், மீசாலை.

(R/144)

# உறுப்பினர்களின் செயற்பாடுகளே சங்கங்களின் வளர்ச்சிக்கு மூலாதாரம்

## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.குமணதாஸ்

(யாழ்ப்பாணம்)

சிக்க கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் கடந்த ஆண்டிற்கான 'செயற்பாட்டறிக்கையின் குறைநிறைகள் பற்றி சங்கங்களின் உறுப்பினர்கள் வெளிக் கொண்டுவருவதன் மூலமே எதிர்கால சங்க நடவடிக்கைளை நெறிப்படுத்தலாம். என கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. குமணதாஸ் தெரிவித்தார்.

சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சங்கானை பிராந்திய சபையால் அண்மையில் சங்க உறுப்பினர்களுக்கான இரண்டாவது பயிற்சிப் பட்டறையில் வளவாளராக் கலந்து கொண்டு சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் என்னும் விடயம் பற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தற்பொழுது 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க சட்டப்படியான விதிகளுக்கும் துணை விதிகளுக்கும் அமைய சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இதற கமைய சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்களின் கடமைகளும், பொறுப்புக்களும் வரையறுக் கப்பட்டுள்ளது. இவை பற்றி பல உறுப்பினர்களுக்கு ஏற்க னவே தெரியும். இதில் ஆண்டு தோறும் பாதீடு (வரவு செலவு) தயாரித்து அதைப் பொதுச் சபை அங்கீகரிக்க வேண்டி· யது பிரதானமாகும்.

சங்கங்கள் கணக்காய்வறிக்கையில் தோன்றும் உண்மையான செலவுகளை பாதீட்டோடு ஒப்பு நோக்கி வேறுபாடு காணபபடின் அதற்கான காரணங்ளைக் கண்டறிந்து எதிர்கால நடவடிக்கைகள் சீர் செய்யப்படவேண்டும்.

பொதுச்சபை உறுப்பினர்களின் கடமை பொறுப்பு என்ற வகையில் ஆண்டு கணக்கறிக்கையில் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட குறிப்பு வாசிக்கப்பட்டு விளக்கம் பெறப்பட வேண்டும். மேலும் பொதுக் கூட்ட அறிக்கையில் தலைவர் செயலாளர் ஒப்பமிடுவதனுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப் படும் சந்தர்பங்களின் அறிக்கையில் குறிப்பிடப்படும் ஒவ்வோர் தீர்மானத்திற்கும் பக்கத்திலும் சிறு ஒப்பமிட வேண்டும். என்றார்.

# கஞ்சாவைத்திருந்தவருக்கு 30ஆயிரம் ரூபா அபராதம்

(திருநெல்வேலி)

கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்று 30ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.

குருநகர் இராசேந்திரம் வீதியை சேர்ந்த ஒருவரிடம் கஞ்சா இருப்பதாக யாழ்ப்பணம் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதை யடுத்து அவரை வளைத்துப் பிடித்து பொலிஸார் சோதனையிட்ட போது அவரிடம் 122கிராம் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸார் அவரை கைது செய்து யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்திய போது அவருக்கு யாழ்.நீதவான் மா. கணேசராஜா 30ஆயிரம் ரூபா ஆபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் 4 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிடப்பட்டது.

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு பீடி விற்பனை செய்ததாகவும், தடை செய்யப்பட்ட சிகரெட் விற்றதாகவும் குற்றம் சாட்டி யாழ்ப்பாணப் பகுதியில் 17 வர்த்தகர்கள் மீது யாழ்.மதுவரித்திணைக்களம் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் 17 வர்த்தகர்களுக்கும் மொதம் 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது (137)

# வினைத்திறன் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு iii இன் அலுவலர்களுக்கான கணணித்திறமையைச் சோதிக்கும் எழுத்துப்பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும் ஒக்டோபர் மாதம் பரீட்சை ஆணையாளரினால் நாடாளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

வடமாகாணத்தைச் சேரந்தவர்களுக்கு ஏற்றவகையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் ஆகிய மாட்டங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை அலுவலக முறைகள் கணக்கீட்டு முறைமைகள் கணணிப்பரீட்சை ஆகிய பாடங்களில் இடம்பெறவுள்ளது.

மும்மொழிகளிலும் இப் பரீட்சை நடத்தப்படவுள்ளதுடன் சித்தி பெறும் பரீட்ச்சார்த்திகளின் பெயர்கள் வர்த்தகமானியில் வெளியிடப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது திணைக்கள தலைவர்களூடாக எதிர்வரும் ஓகஸ்டமாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை பெலவத்தை பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை தினமுரசு காரியாலயத்திலோ அல்லது 06.07.2012 வர்த்தமானியிலோ பார்வையிடலாம்.

# குடிநீர் விநியோகம் சீரமைப்பு

(மண்டைதீவு)

கடந்த ஒரு கிழமைக்கு மேலாக தடைப்பட்டிருந்த மண்டைதீவுக்கிராமத்திற்கான குழாய் மூலகுடிநீர்விநியோகம் சீர்செய்யப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அல்லைப்பிட்டிக்கும் மண்டைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பினூடு செல்லும் நீர்விநியோகக் குழாயில் ஏற்பட்டிருந்த சேதம் சீர்செய்யப்பட்டதனை அடுத்து மண்டைதீவுக் கிராமத்திற்கான குடிநீர்விநியோகம் சீர்செய்யப்பட்டுள்ளது. (பா)

# தனித்திருந்தவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மேற்கு கொத்தியாவத்தை பகுதியில் இறந்து இரண்டு நாட்கள் கடந்ததாகக் கருதப்படும் முதியவர் ஒருவரது சடலம் கடந்த வியாழக்கிழமை சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அதே இடத்தைச்சேர்ந்த சின்னத்துரை பாலசுப்பிரமணியம்(வயது56) என்றவயோதிபரே இவ்வாறு இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் தனித்து வாழ்ந்து வந்த அவர் கூலி வேலை செய்து வந்ததாகவும் கடந்த செவ்வாய்க்கிழமை இவருடன் உறவினர் சிலர் கதைத்திருக்கின்றனர்.

அதன் பின்னர் அவர்கள் அவரைக்காணாததைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை அவர் வசித்துவந்த பகுதிக்குச் சென்று பார்த்தபோது அவர் வசித்து வந்த வீட்டில் படுக்கையில் இறந்து கிடக்கக்காணப் பட்டதாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (பா)

# ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சத்தியசாயி சேவா நிறுவனத் தலைவர் டாக்டர் நரேந்திரநாத் ரெட்டியின் ஆன்மீக உரையொன்று எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெய்வீகத்தின் உருவ அருள் நிலைகள் என்னும் தலைப்பில் உரையாற்றவிருக்கும் ஆன்மீக உரையைக் கேட்பதற்கு ஆர்வலர்களை வருகைதருமாறு வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கருத்தரங்கு

(பருத்தித்துறை)

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பினால் தரம் 5 மாணவர்களுக்கான அறிவூட்டல் கருத்தரங்கு நேற்று வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். (109)

# சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற ஆசிரியர்களின் விபரங்கள் கோரல்

(வலிகாமம்)

இலங்கை கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாணப் பாடசாலைகளில் சேவையாற்றிக் கொண்டு, ஆசிரியசங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரங்களை கோரியுள்ளார்.

இந்த ஆசிரியர் விபரங்களை வடமாகாணத்திலுள்ள 12 கல்விவலயப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சின் செயலாளர் கடிதமூலம் கோரியுள்ளார். இந்த விபரங்கோரல் தொடர்பில் வடமாகாணத்தில் இயங்கிவரும் முக்கியமான ஆசிரியர் சங்கங்களான இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெற்றுள்ள ஆசிரியர்கள் அச்சமடைந் துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்களின் தொழிற் சங்கப்போராட்டம் நடைபெற்று வரும் சூழ்நிலையில், ஆசிரியர் சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரங்களைக் கோரியிருப்பது, எதிர் காலத்தில சம்பள உயர்வு,பதவி உயர்வு கோரி போராட்டம் மேற்கொள்ளவுள்ள ஆசியர்களை பயமுறுத்தும் நடவடிக்கையாகும் என ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள் கருதுகின்றனர். (06)

# ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தின் 5 ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக அகில இலங்கை இந்து மா மன்றம் மற்றும் மனிதநேயம் அமைப்பு ஆகியவற்றின் தலைவர் கைலாசப்பிள்ளை தம்பதிகள் கௌரவ விருந்தினராக யாழிலுள்ள இந்தியா துணைத்தூதரக அலுவலர் வி.மாகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசாரத் திணைக்களம் வருடா வருடம் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடாத்தும் இந்து இறுதி நிலைப் பரீட்சைக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக, உதவிப் பணிப்பாளர் திருமதி.ஹேமலோஜினி குமரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளில் சேவையாற்றும் அனைத்து ஆசிரியர்களும் இக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கிற்கு கலா சார உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தலைமை வகிக்கவுள்ளார். விருந்தினராக உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜிகுமரன் கலந்து கொள்ளவுள்ளதுடன். 'இந்து சமய வாழ்வியல்' எனும் விடயம் பற்றி வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீந் திரன் கருத்துரை வழங்கவுள்ளார். (06)



பரந்தன் இந்து மகா வித்தியாலய மாணவர்களின் சுய ஆக்கம் தொடர்பான கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வர்த்தக மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த வங்கி மாதிரிக் கண்காட்சியில் வர்த்தகப்பாட ஆசிரியரும், மாணவர்களும் இருப்பதையும், கண்காட்சியைப் பார்வையிடும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆக்கங்களை உருவாக்கிய மாணவர்கள் விளக்கமளிப்பதையும் காணலாம். (06)

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத் தெரியாதவன் போதிக்கிறான். - கர்னல் கீல்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
, thinamurasu@live.com

## நமக்காக ஒலிக்கும் ஆதிக்கக் குரல்!

ஆல் போல் தழைத்து அறுகு போல் பெருகி வாழச் சொல்லி வாழ்த்துகிறார்கள் அல்லவா! ஆல் போல பெருவிருட்சமாகி விடுவதுதான் இயலாவிட்டால் போகட்டும், அறுகம்புல் போல உயிர்ப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் இயல்பு நமக்கு இன்றியமையாத் தேவையாகிறது.

அழிந்துவிடாமல் மீள்வதில் அறுகம்புல்லுக்கொரு ஆற்றல் உண்டு. ஏழுமுறை உழுதுழுது அதன் வேர்முனை ஈறாகப் பொறுக்கியெடுத்த பின்னும், மண்ணிடை நுணுங்கி மறைந்து கிடந்த அணுவளவு கணுவிலிருந்து அது மீண்டெழுந்து முளைத்து நிலம் மூடிப் படர்ந்துவிடும்.

தமிழ் மக்களுக்கு அந்த ஆற்றல் இயல்பாயமைந்தது என்றுதான் தோன்றுகிறது. ஏனெனில், தமிழ் மொழிக்கு அந்தத் தகவமைப்பு இருந்திருக்கிறது. வடமொழியின் பல்முனைத் தாக்குதலில் தமிழின் கிளைமொழிகளாகிய மற்ற திராவிட மொழிகள் யாவும் தேவநாகரி எழுத்தொலித் தாக்கத்தை உள்வாங்கி இணங்கிப் போயிருக்கின்றன.

தமிழ் மட்டும் காலமாற்றத்திற்கேற்ற தகவமைப்போடு தன் வேர்த்தன்மையை இழக்காமல் மக்களின் நாவில் காலத்தை ஊடறுக்கும் மொழியாகத் தொடர்ந்து உயிர்த்திருக்கிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட இலக்கிய எழுத்து வாழ்வையும் அது கொண்டிருக்கிறது.

இவ்வளவு புராதனமான நீண்ட ஒரு பண்பாடு, இன்றைய பிரச்சினையில் எல்லாவற்றையும் கறுப்பு-வெளுப்பாய் மட்டுமே எப்படிப் பார்க்க முடிகிறது? மறுபக்கத்தை மறைத்து வெறுத்து விரோத நிலையில் வைத்துக்கொண்டு, தனது பக்கத்தை மட்டும் ஒரே வாய்பாடாக உருப்போட்டுக் கொண்டும் ஒற்றைத் தேசிய உருவாடியபடியும் இருப்பது எங்ஙனம்? கண்மூடி எதிர்ப்பதும் அல்லது கண்மூடி ஆதரிப்பதும் என்ற இரு நிலைப்பாடுகளுக்கிடையில் நம்மை இறுக்கிக் கொண்டிருப்பதை எப்படித்தான் விளக்க முடியும்?

இப்படி பன்மைத்துவத்தை மறுத்து ஒற்றைப்படையான சிந்தனைக்குள் மனிதர்களை மாட்டுவிக்கும் ஒரு கலாசாரம் எப்படித் தற்காலப் பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடியும்? உலகின் சமகாலப் போக்கிற்குள் எப்படிப் பொருந்திக் கொள்ளும்? தன்னை எப்படிப் புதுப்பித்துக் கொள்ளும்? தன்னை எப்படி விமர்சித்துக் கொள்ளும்? தன்னை விமர்சிக்க சக்தி இல்லாத கலாசாரம் உயிருடன் இருக்க முடியுமா?

நம் சமூகத்திற்கென்று பிரத்தியேகமாக வளர்ந்துவிட்டிருக்கும் ஒரு குணாம்சம் இதற்குக் காரணமோ என்று தோன்றுகிறது. நம்மை அறிவுச்சமூகமாகச் சொல்லிக் கொள்வதில் முனைப்புக் காட்டுகிறவர்களிடம் மரபாயிருந்து வரும், 'மற்றவர்களைச் சமமாய்க் கருத மறுக்கும்' போக்குதான் அது. இவ்வாறு சிலர் நினைத்துக்கொண்டிருக்கும் அறிவுரீதியான மேலாதிக்கமும், மற்றோரைக் கீழ்நிலைப்படுத்தி அவர்கள் மீது அதிகாரம் செலுத்த விரும்பும் மனோபாவத்தையே கொண்டிருக்கிறது. "நான் இந்த சமூகத்தின் மதிப்புக்குரிய உயர்ந்த பிரஜை. எனவே நான் சொல்வதையே கேள்!" என்கிற அதிகாரக் குரலைத் தன்னிடம் வைத்திருக்கிறது.

இவர்கள்தான் நமது சமூகத்திற்காக, மக்களுக்காகச் சிந்திக்கிறார்கள் பேசுகிறார்கள் என்பதுதான் நமது பிரச்சினையில் அவிழ்க்க முடியா முடிச்சாக தொடர்ந்து வதையளித்துக் கொண்டிருக்கிறது. இவர்களிடமிருந்தும், இவர்கள் உருவாக்கி அளிக்கும் சிந்தனையிலிருந்தும் மீண்டு வந்தே, இன்றைய பிரச்சினைக்கும் எமது மக்களின் துக்கங்களுக்கும் விடை தேடியாக வேண்டும்.

- ஆசிரியர்

# கிரேக்க கடன்பத்திர முதலீடு மத்திய வங்கிக்கு பாரிய நட்டம்

நிதிரீதியாக பின்னடைவை எதிர்நோக்கியுள்ள ஐரோப்பிய நாடான கிரேக்கத்தின் கடன் பத்திர முறிகளில் முதலீடு செய்தமையால் இலங்கை மத்திய வங்கி பாரிய நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கி 8.4 மில்லியன் யுரோக்களை, இலங்கை பெறுமதியில் 1.5 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டே குறித்த முதலீடுகள் இடம்பெற்றுள்ளன.

நாடாளுமன்ற பொது வர்த்தக குழுக்களின் கூட்டத்தின் போது, எதிர்கட்சியின் உறுப்பினர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலாகவே இந்தக் தகவல் நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் கிரேக்க நாட்டின் கடன்பத்திர முறிகளில் எவ்வளவு நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது என எதிர்கட்சியினர் கேட்டிருந்தனர்.

இது தொடர்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பப்பட்டிருந்தது.

அதன்போது, மத்திய வங்கியின் முதலீடுகள் தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் வெளியிட முடியாது என தெரிவிக்கப்பட்டது.

# புதிய சட்டமா அதிபரின் நியமனம் தீர்மானம் எதுவும் இல்லை

புதிய சட்ட மா அதிபரை நியமிப்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபராக பதவி வகித்து வந்த ஈவா வனசுந்தர, உச்ச நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதனால் சட்ட மா அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெற்றிடத்திற்கு யாரை நியமிப்பது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். பதில் சட்ட மா அதிபராக சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

# சிறுவர் மீது துஷ்பிரயோகம் புரிவோர் தெருநாய்களைப் போன்றவர்கள்



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் தெருநாய்களைப் போன்றவர்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விமர்சித்துள்ளார்.

ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எவரும் கிரிமினல் குற்றங்கள், ஊழல் அல்லது மோசடிகளில் குற்றவாளிகளாக காணப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

14 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள தங்காலை ஐ.ம.சு.கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் மற்றும் நால்வர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அவர் கூறுகையில், நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து தான் மிகுந்த கவலையடைவதாக தெரிவித்தார்.

இந் நபர்களுக்கு என்ன கோளாறு என்று எனக்குப் புரியவில்லை. என்னைப் போன்று ஸ்ரீலங்கா சு.க. அரசியல்வாதிகள் பலர் பல தசாப்தங்களாக இத்தகைய குற்றச்சாட்டுகளின்றி அரசியலில் ஈடுபடுகின்றோம். ஆனால், இப்போது ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசியல்வாதிகள் பலர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதை நாம் காண்கிறோம். இவை கட்சியின் மதிப்பை களங்கப்படுத்துகின்றன.

இது நிறுத்தப்படுவது அவசியம். நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக காணப்படுபவர்களுக்கு எதிராக மாத்திரமல்லாமல் வழக்குகள் நிலுவையில் உள்ளவர்கள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கூறினார்.

# குண்டு வெடித்து சிதறியது பாதம்

(முல்லைத்தீவு)

வேட்டைக்காக வீட்டில் வைத்திருந்த குண்டு வெடித்து ஒருவரின் பாதம் சிதறிய சம்பவம் ஒன்று முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது.

நேற்று நண்பகல் முல்லைத்தீவு சிலாவத்தைப் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தவராசா உதயகுமார் (வயது-32) என்பவரின் கால் பாதமே இவ்வாறு சிதறியது.

உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# மாணவியைக் கடத்தி கப்பம்பெற முயன்றோர் கைது

(கொழும்பு)

கப்பம் பெறும் பொருட்டு பாடசாலை சிறுமி ஒருவரை கடத்திச் சென்ற நபரை கடுப்பத்து என்ற இடத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் குறித்த சிறுமியை பாடசாலைக்கு அருகில் கடத்திச் சென்றுள்ளார். சிறுமியை காணாத தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக மோட்டார் சைக்கிளில் கடத்தப்பட்ட சிறுமி, பின்னதாக வானில் ஏற்றப்பட்டுள்ளார்.

இந்த வானை பொலிஸார் பின்தொடர்ந்ததால் சிறுமியை சந்தேக நபர்கள் பாதையில் விடுவதற்கு முயற்சித்துள்ளனர்.

இதன் போது அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சிறுமியை கடத்தி 25 இலட்சம் ரூபா கப்பம் பெறுவதற்கு முயற்சித்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பரீட்சை நிலையங்களுக்கு அருகில் தேர்தல் பிரசாரத்திற்கு தடை

க.பொ.த (உ/த) பரீட்சைகள் நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்கு அருகில் மாகாண சபைத் தேர்தல் வாக்கெடுப்புடன் தொடர்புடைய பிரசார நடவடிக்கைகளுக்காக ஒலி பெருக்கிகளை உபயோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என். ஜே.புஸ்பகுமாரவிற்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரியவிற்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது இதற்கான தீர்மானம் எட்டப்பட்டதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ. எல்.ரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிப்பதே இதன் நோக்கமென அவர் குறிப்பிடுகிறார்.

இவ்விடயம் தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் தீர்வுக்குத் தடையாக
# கூட்டமைப்பின் இரட்டைவேடம்



சங்கர சிவன்

தமிழ்மக்களின் அரசியலில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பதிலாகப் பின்னடைவு ஏற்பட்டு வருவதற்கான காரணம்பற்றி மக்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். சிங்கள அரசாங்கங்களின் சதி என்று பொதுப்படையாகக் கூறித் தமிழ்த் தலைமையின் இயலாமையை அல்லது தவறை மூடி மறைக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி அமைத்த அரசாங்கங்கள் இனப்பிரச்சினையைத் தவறான முறையில் கையாண்டன என்ற குற்றச்சாட்டைப்போலவே தமிழ்த்தலைமை பிரச்சினையைச் சரியான முறையில் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டும் முக்கியமானது.

அரசியல் கட்சிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுக்குச். சொல்லிலும் செயலிலும் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். கொள்கை நிலைப்பாட்டைப் பொறுத்த வரையில் மக்களுக்கும் அம்மக்களால் தெரிவு செய்யப்படும் கட்சிக்குமிடையே வேறுபாடோ இடைவெளியோ இருக்கும் பட்சத்தில் அது மக்களின் நலனையே பாதிக்கும். தலைவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இன்னொரு விதமாகக் கூறுவதானால் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி பின்பற்றுகின்ற கொள்கை என்ன என்பது பற்றிய தெளிவான விளக்கம் மக்களுக்கு இருக்கவேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் சரியாக நடந்து கொள்ளாததே தமிழ் மக்களுக்கு இழப்புகளும் படிப்படியான பின்னடைவுகளும் ஏற்பட்டதற்குப் பிரதான காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைத் தெரிவு செய்த மக்களுக்குக் காட்டுகின்ற முகம் வேறு. அரசாங்கத்துக்கும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கும், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் காட்டுகின்ற முகம் வேறு.

**தனியாக வடமாகாணம் என்றாலும் அதை ஏற்க வேண்டும் என்ற நிலைக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது வந்திருக்கின்றபோதிலும் மக்களுக்கு அதைக் கூறத் தயங்குகின்றார்கள். வடக்கு, கிழக்கு இணைப்பை வலியுறுத்தாமலிருப்பது தான் இன்றைய யதார்த்தத்துக்கு அமைவானது என்று மக்களுக்கு எடுத்துக் கூறினால், தமிழ்க் கடுங்கோட்பாட்டாளர்கள் தங்களைத் துரோகிகள் எனக் கூறி மக்களைத் திசைதிருப்பிவிடுவார்கள் என்ற அச்சம் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு உண்டு. அதனால் மக்களுக்கு ஒரு முகமும், மற்றவர்களுக்கு வேறொரு முகமும் காட்டுகின்றார்கள்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சம்பந்தன் ஏசியன் ட்ரிபியூன் என்ற இணையத்தளத்துக்கு 29-06-2012ஆம் திகதி ஒரு செவ்வி வழங்கியிருக்கின்றார். அச்செவ்வியில் பல விடயங்களுக்கு மத்தியில் அதிகாரப் பகிர்வு பற்றியும் பேசப்பட்டது. அதிகாரப் பகிர்வின் கீழ் அமையும் பிராந்திய அரசாங்கம் பற்றிய பேச்சு வந்தபோது பிராந்திய அரசாங்கத்தின் அலகு எது என்ற கேள்வி எழுந்தது. அக் கேள்விக்குச் சம்பந்தன் பின் வருமாறு பதிலளித்தார்.

"அது ஒரு மாகாணமாக இருக்கலாம். அது மூன்று மாகாணங்களாகவும் இருக்கலாம். அல்லது ஐந்து மாகாணங்களாகவும் இருக்கலாம். எதுவாகவும் அது இருக்கலாம்."

அதிகாரப் பகிர்வுக்கான அலகு ஒரு மாகாணமாகவும் இருக்கலாம் என்ற சம்பந்தனின் பதில் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்புத் தலைவர்கள் செய்து வருகின்ற பிரசாரத்துக்கும் வளர்த்து வருகின்ற நம்பிக்கைக்கும் முற்றிலும்முரண்பாடானதாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகிலேயே அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும் என்றும்,இரண்டு மாகாணங்களும் இணையாத எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது என்றும் ஊடக அறிக்கைகளிலும், பொதுக்கூட்ட மேடைகளிலும் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வருகின்றார்கள். இரண்டு மாகாணங்களும் இணைந்த நிலையிலேயே அரசியல் தீர்வு என்ற நம்பிக்கையை இப்பிரசாரத்தின் மூலம் மக்களிடம் வளர்த்திருக்கின்றார்கள். மக்களிடம் இந்த நம்பிக்கையை வளர்த்துவிட்டு இப்போது வடக்கும், கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக அதிகாரப் பகிர்வு இடம்பெறுவதையும் ஏற்க முடியும் என்ற வகையில் பேசுவது கொள்கை நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதைத் தெரிவு செய்த மக்களுக்கு விசுவாசமாக நடக்கவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு பதின்மூன்றாவது திருத்தத்தையடுத்து நடைமுறைக்கு வந்தது. 1988 டிசம்பரில் செயற்படத் தொடங்கிய மாகாண சபை 1990 மார்ச் மாதத்தில் கலைக்கப்பட்ட பின்னரும் மாகாண சபைச் செயற்பாட்டின் முக்கிய அம்சமான வடக்கு,கிழக்கு இணைப்பு தொடர்ந்தது. இந்த இணைப்பு செல்லுபடியற்றது என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பதினாறு வருடங்களின் பின் 2006 ஒக்ரோபர் மாதத்தில் வழங்கப்பட்டது.

மாகாண சபை கலைக்கப்படும் சூழ்நிலையைப் புலிகளும் பிரேமதாசவும் கூட்டாகத் தோற்றுவித்தார்கள் என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றதேயொழியத் தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு மௌன அங்கீகாரம் அளித்ததென்பது பெரிதாகப் பேசப்படவில்லை. வடக்கு, கிழக்கு மாகாண சபை தொடர்ந்து செயற்பட அனுமதித்திருந்தால் இரண்டு மாகாணங்களினதும் இணைப்பு சர்வசன வாக்கெடுப்பின் மூலம் சட்டபூர்வமானதாகும் நிலை ஒருவேளை ஏற்பட்டிருக்கலாம். அப்படி ஏற்படாமலும் போயிருக்கலாம். அது பற்றிய ஆய்வு இப்போது தேவையில்லை.

மாகாண சபை கலைக்கப்பட்டதற்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கும் இடைப்பட்ட பதினாறு வருட காலத்தில் அதற்கான தேர்தலை நடத்துவதற்கு இயலவில்லை. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இன்று கோரிக்கை விடுக்கும் தலைவர்கள் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துமாறு அப்போது கோரிக்கை விடுக்கவில்லை. தேர்தலை நடத்துவதற்கு எதிரான நிலைப்பாட்டையே அவர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தினார்கள். அதேநேரம், மக்களுக்கு உசுப்பேற்றும் வகையில் வடக்கு, கிழக்கு இணைப்பை அடிக்கடி வலியுறுத்தினார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தவிர்க்க முடியாத வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தமிழ்த் தலைவர்கள் கருதவில்லை என்பதையும் வாக்குகளுக்கான உணர்ச்சிக் கோஷமாகவே இணைப்புக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்தார்கள் என்பதையும் இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இரண்டு மாகாணங்களையும் உள்ளடக்கிய மாகாண சபை அமைவதற்காகவே இணைப்பு இடம்பெற்றது. எனவே, வடக்கு, கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டிலிருந்து இணைப்பைத் தனிமைப்படுத்த முடியாது. வடக்கு, கிழக்கு மாகாண சபையை நிராகரித்துக்கொண்டு இணைப்பை வலியுறுத்துவதை வாக்குகளுக்கான உணர்ச்சிக் கோஷம் என்று தானே கூற வேண்டும்.

தனியாக வடமாகாணம் என்றாலும் அதை ஏற்க வேண்டும் என்ற நிலைக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது வந்திருக்கின்றபோதிலும் மக்களுக்கு அதைக் கூறத் தயங்குகின்றார்கள். வடக்கு, கிழக்கு இணைப்பை வலியுறுத்தாமலிருப்பது தான் இன்றைய யதார்த்தத்துக்கு அமைவானது என்று மக்களுக்கு எடுத்துக் கூறினால், தமிழ்க் கடுங்கோட்பாட்டாளர்கள் தங்களைத் துரோகிகள் எனக் கூறி மக்களைத் திசைதிருப்பிவிடுவார்கள் என்ற அச்சம் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு உண்டு. அதனால் மக்களுக்கு ஒரு முகமும், மற்றவர்களுக்கு வேறொரு முகமும் காட்டுகின்றார்கள். இது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய சுய முரண்பாடு.

இன்றைய நிலையில் இணைப்பு சாத்தியமில்லை என்பது தெரிந்திருந்தும் இணைப்பு இல்லாத தீர்வை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். மக்களிடம் வளர்த்துவிட்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்ற தீர்வைப் பெற்றுக் கொடுக்காவிட்டால் வழமையான வாக்குகளை இழக்க நேரிடும். அதேநேரம் யதார்த்தத்துக்கு முரணான கோரிக்கைகளை வலியுறுத்துவது இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை பெறுவதாகிவிடும். இந்த நிலையில் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துகின்ற அதேவேளை, நாடாளுமன்ற ஆசனங்களையும் தக்கவைப்பதற்கான முயற்சியையே இப்போது காண்கின்றோம். யதார்த்தத் தீர்வை ஏற்கத் தயார் என்று வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவது ஏசியன் ட்ரிபியூன் செவ்வி இதற்கு உதாரணம். மறுபுறுத்தில், முன்வைக்கப்படும் தீர்வுகளை ஏதாவது காரணம் கூறி நிராகரிப்பதும் தீர்வு முயற்சிகளைக் குழப்புவதும் வாக்குகள் இழக்கப்படுவதை இதன் மூலம் தவிர்க்கலாம். வாக்கு வங்கியை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், அடைய முடியாத தீர்வு பற்றிய நம்பிக்கையைத் தமிழ் மக்களிடம் தொடர்ந்து வளர்க்கின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் எமக்கான உரிமையைப் பெறுவது சாத்தியமற்றது என்ற சம்பந்தனின் மட்டக்களப்பு பேச்சும் தமிழீழமே எங்கள் இலக்கு என்று கலாநிதி போல் நியூமனுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வழங்கிய செவ்வியும் இதற்கு உதாரணங்கள்.

**அடைய முடியாத தீர்வு பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதும் யதார்த்த தீர்வை ஏற்கத் தயார் என்று வெளியுலகுக்கு வேறொரு முகம் காட்டுவதுமான இரட்டைவேட செயற்பாட்டுக்குத் தமிழ்த் தலைவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்துகொண்டு எட்டாத தீர்வுக்காகச் சந்ததி சந்ததியாகக் காத்திருப்பதையே இத்தலைவர்கள் விரும்புகின்றார்கள் என்று அர்த்தமாகிவிடும்.**

அடைய முடியாத தீர்வு பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதும் யதார்த்த தீர்வை ஏற்கத் தயார் என்று வெளியுலகுக்கு வேறொரு முகம் காட்டுவதுமான இரட்டை வேட செயற்பாட்டுக்குத் தமிழ்த் தலைவர்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்துகொண்டு எட்டாத தீர்வுக்காகச் சந்ததி சந்ததியாகக் காத்திருப்பதையே இத்தலைவர்கள் விரும்புகின்றார்கள் என்று அர்த்தமாகிவிடும்.

# பிரிவினைவாதத்தை ஏற்படுத்த ரணில் முயற்சிசெய்கின்றார்



(கொளும்பு)

ந டில் மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்ப டுத்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சித்து வருவதாக ஜே.என்.பி. கட்சியின் அரசியல் சபை பேச்சாளர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடாத்தி அதன் மூலம் மீளவும்நாட்டில் பிரிவினைவாதத்தை தூண்ட ரணில் முயற்சிக்கிறார்.

இந்த சூழ்ச்சித் திட்டத்திற்கு ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறனர்.


எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள மூன்று மாகாணசபைத் தேர்தலில்கட்சியின் சார்பில் நிறுத்த வேட்பாளர்களை தெரிவு செய்ய முடியாத நிலையில், ரணில் வடக்கில் தேர்தலை நடாத்த ஆர்வம் காட்டி வருகின்றார்.

அமெரிக்கா, இந்தியா, சில தன்னார்வ தொண்டு அமைப்புக்கள்,புலம்பெயர் தமிழர்கள், ஜே.வி.பி. போன்ற தரப்புக்களும் வடக்கில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

13ஆம் திருத்தச் சட்ட மூலத்திலிருந்து காணி மற்றும் காவல்துறைஅதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்படுகிறது இதனால் காணிகாவல்துறை அதிகாரம் பற்றிய சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு விஜயம் செய்ய சுவீடன் அமைச்சர் விருப்பம்



கடந்த பல வருடங்களாக எந்தவொரு இலங்கை இராஜ தந்திரியும் சந்திக்காத சுவீடனின் வெளிவிவகார அமைச்சரை சுவீடனில் புதிய இலங்கைத் தூதுவர் ஒஸ்டீ அழகப்பெரும சந்தித்துள்ளார். புதிய தூதுவர் இராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளார்.

சுவீடன் வெளிவிவகார அமைச்சில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நட்புறவு ரீதியல் நடைபெற்றன. சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கால் பில்டிட் இந்த உறவுகள் பலமடையுமென தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தில் இலங்கை அடைந்து வரும் பாரிய உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றம், இனங்களுக்கு இடையிலான நட்புறவு போன்றவை தொடர்பாக அரசு கவனம் செலுத்துவதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள சுவீடன் வெளிவிவகார அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த, அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், மேற்குலகம் அதற்கு பொறுமையாக ஆதரவளிக்க வேண்டுமெனவும் தூதுவர் தெரிவித்தார்.

# கருத்து சுதந்திரத்தை அரசாங்கம் மதிக்கவில்லை

அரசாங்கம் மெய்யாகவே கருத்து சுதந்திரத்தை மதிக்கின்றதா என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா மிரர் மற்றும எக்ஸ் நியூஸ் ஆகிய இணையத்தளங்கள் முடக்கப்பட்ட சம்பவமானது அரச அடக்குமுறையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது ஓர் நியாயமான சந்தேகமேயாகும்.


இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் யாரின் தேவைக்காக மேற்கொள்ளப்படுகின்றன?

குற்றவியல் சட்டத்தின் 118ஆம் சரத்தின் அடிப்படையில் இணைய ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சரத்தானது 2002ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது.

சட்டத்திற்கு புறம்பான வகையில் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவிற்கு அமையவே இணைய தளம் சோதனையிடப்பட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ஊடக சுதந்திரம் என்ற போர்வையில் அரச விரோத செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு மாகாண சபை தேர்தலில் 347,099 பேர் வாக்களிக்கத் தகுதி!




கிழக்கு மாகாண சபை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய மூன்று தொகுதியிலும் 3,47,099 பேர் வாக்களித் தகுதி பெற்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அசங்கரத்னாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தேர்தல் தொகுதியில் 100,616 வாக்காளர்களும், மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 162,451 வாக்காளர்களும், பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 84,032 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.2011ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெறவுள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அசங்க ரத்னாயக்கா மேலும் தெரிவித்தார்.

# சன்.சீ கப்பலில் சென்றவரை நாடுகடத்த கனடா தீர்மானம்!

(கொழும்பு)

கனடாவுக்கு பெருந்தொகையாக அகதிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் நாடுகடத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 492 இலங்கைத் தமிழ் அகதிகளுடன் கனடாவுக்கு சென்ற, சன் சீ கப்பலின் சந்தேக நபர்களில் ஒருவரான ஜனா (பொன்னுத்துரை ஜனந்தன்), கனேடிய அரசினால் சிறிலங்காவுக்கு நாடு கடத்தப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த அகதிகள் கப்பலினை கனடாவுக்கு கரை சேர்த்தவர்களாக ஏழு நபர்கள் மீது கனேடிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில் ஏழாவது சந்தேக நபராக இனங்காணப்பட்ட பொன்னுத்துரை ஜனந்தனை நாடுகடத்துவதற்கு கனேடிய அரசாங்கம் ஏற்பாடு செய்து வருவதாக தெரியவருகின்றது.

சத்தயபவன் ஆசீர்வாதம், குணறொபின்சன் கிறிஸ்துரராஜா, லெஸ்லி ஜனா எமனுவேல், நடராஜா மகேந்திரன், தயாகரன் மார்கண்டு, தம்பிநாயகம் இஜேந்திரன் ஆகியோர் மீது கனேடிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில் குறித்த நபர் மீது ஆட்கடத்தல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதோடு, கனேடிய மண்ணுக்கு ஆபத்தானவர் என கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த அகதிகள் கப்பல் விவகாரம் தொடர்பில் நடராஜா மகேந்திரன் என்பவரை கனேடிய காவல் துறையினர் சமீபத்தில் கைது செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஹரிஹரனின் நிகழ்ச்சி இரத்து



பிரபல இந்திய பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஏழு புளூம்பீல்ட் மைதானத்தில் மாபெரும் நேரடி இசை நிகழ்ச்சி ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனமொன்றின் அனுசரணையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படவிருந்தது.

எனினும், இறுதி நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த இசைநிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் நிகழ்ச்சியில் பங்கேற்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹரிஹரன் இலங்கை இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் கூடாது எனதென்னிந்தியாவின் மே 17 இயக்கம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சிறைச்சாலை சம்பவம் புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பாதிக்காது

(கொழும்பு)

தமிழ் கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரித மாக முன்னெடுப்பதற்காக மூன்று விசேட நீதிமன்றங்களை அமைக்கும் பூர்வாங்க நடவ்டிக்கைகள் நிறைவடைந்துள்ள தோடு இந்த மாதத்தில் இவர்களுக் கெதிரான வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிரி கஜதீர தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு பெற விருப்பமானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் ஏனையவர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதமாக விசாரணை செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வவுனியா சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக 23/2 நிலையியற் கட்டளையின் கீழ் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது, புலிச் சந்தேக நபர்கள் 3 சிறைச்சாலை அதிகாரிகளை பணயக் கைதிகளாக தடுத்து வைத்ததால் தான் வவுனியா சிறையில் குழப்பம் ஏற்பட்டது.

நீதிமன்ற உத்தரவின்படி வேறு சிறைக்கு இடமாற்றப்படவிருந்த புலி சந்தேக நபர்கள் சிலரை மீளவும் வவுனியா சிறைக்கு அழைத்து வருமாறு கோரியே புலிகள் குழப்பம் ஏற்படுத் தினர். சிறை அதிகாரிகளினால் புலிச் சந்தேக நபர்களின் கோரிக்கையை நிறை வேற்ற முடியாது. இந்த நிலையிலே விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்புடன் சிறை அதிகாரிகள் மீட்கப்பட்டனர். துப்பாக்கியோரவையோ பயன்படுத்தாமலே இவர்கள் மீட்கப்பட்டனர். பல்வேறு ஆயுதங்கள், வெளிநாடுகளுக்கு பேசும் தொலைபேசிகள் உடனே புலி சந்தேக நபர்கள் இருந்ததன் மூலம் இந்த நடவடிக்கையின் பயங்கரம் தெளிவாகிறது.

எதுவித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. ஒருகைதி இறந்துள்ளதால் இது தொடர்பான பிரேத பரிசோதனை நடைபெற்றது. ஆனால் நீதவானின் தீர்ப்பு இதுவரை வழங்கப்படாத நிலையில் தொடர்ந்து இது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகிறது. எனவே இந்த மரணம் குறித்து முன்கூட்டி எந்த வித முடிவுக்கும் வர முடியாது. இவர் இருதய நோய்க்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார். பிரேத பரிசோதனையின் பின்னர் உண்மை வெளியாகும். இறந்தவரின் சடலத்தை உறவினர்கள் கோரியுள்ளதாக கூறப்பட்டபோதும் சடலத்தை ஏற்க யாராவது முன்வரவேண்டும். எனக்குத் தெரிந்தளவில் இதுவரை யாரும் சடலத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக அரசாங்கம் விசாரணை நடத்தி வருகிறது. அமைச்சு மட்டத்திலும் குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்தப்படுகிறது. இது தொடர்பாக தகவல் திரட்டப்படுகிறது. எந்த கைதிக்கும் எதுவித அநியாயமும் ஏற்படுத்தாதிருக்க எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.


வவுனியா சம்பவத்தின் மூலம் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கை நிறுத்தப்படாது. தமிழ் கைதிகளின் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இவர்களின் வழக்குகளை விசாரணை செய்வதற்கு மூன்று விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த மாதத்தில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்.

புனர்வாழ்வு பெற விரும்பும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் ஏனையவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# மக்களின் தேவைகளைக் கண்டறிந்து பூர்த்தி செய்து வருகின்றோம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படைத் தேவைகளை கண்டறிந்து அவற்றை நாம் பூர்த்தி செய்து வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்த்திரி அலனரின் (உதயன்) தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் மாணவர்கள் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. முப்பது வருடத்திற்கு மேலாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

இதனடிப்படையில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களது வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கப்படும் இத் துவிச்சக்கர வண்டிகளை அவை வழங்கப்படும் நோக்கத்திற்கமைய பயன்படுத்தப்படவேண்டும். கொடிய யுத்தத்தால் நாம் இழந்தவற்றை ஈடுசெய்ய முடியாது போனாலும் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த 'காலங்களில் நாம் துன்பங்கள் துயரங்களை அனுபவித்திருந்தாலும், எமது எதிர்கால சந்ததி கஸ்ரங்களை அனுபவிக்காது சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரையினை பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் நிகழ்த்துகையில், தமிழ் மக்களது நலன்சார்ந்த விடயங்களுக்காக இந்திய அரசு பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கி வருகின்றது. அவ்வாறு தமிழ் மக்களது உரிமைப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பயனாளிகளுக்கான துவிச்சக்கரவண்டிகளை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், பிரதேச சபை உறுப்பினர் ரங்கன் ஆகியோர் வழங்கி வைத்தனர். இதன்போது வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட 18 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 133 பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை அபிவிருத்திக்கு நி[தி] ஒதுக்[கீ]டு

(வரணி)

வரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிலவும் முக்கிய குறைபாடுகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருவதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

தற்போது அரசாங்கத்தால் பாடசாலை அவசர திருத்த வேலைகளுக்காக சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் வேலையாக குழாய் மூலம் மாணவர்களுக்கு குடிநீர் விநியோகம், வகுப்பறை கதவு பழுதுபார்த்தல், பாடசாலை வாசலுக்கு தூண் அமைத்து கதவு போடுதல் போன்ற வேலைகள் முன்னெடுக்கவுள்ளோம்.

முன்னர் கதவுகள் இல்லாமையால் கட்டாக்காலி கால் நடைகள் பாடசாலைக்குள் நுழைந்து அசௌகரியத்தை ஏற்படுத்தி வந்த நிலையில் அவற்றைத் தடுக்கும் வகையிலேயே இவ் வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பாடசாலைக்குரிய மிகப் பழைய கட்டடம் பூட்டிய நிலையில் இருப்பதால் அதைப் புனரமைப்பதற்கு உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்தியுள்ளோம்.

அனுமதி கிடைத்ததும் அக் கட்டிடம் சீர் செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (150)

# நஷ்டத்திலிருந்து மீண்டுள்ளது சங்கானை ப.நோ.கூ.சங்கம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கம் பணியாளர்களின் அர்ப்பணிப்போடு கூடிய ஒத்துழைப்பும் கூட்டுறவு உதவி ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆக்கமும், ஊக்கமும் மூலம் பின்னடைவிலிருந்து முன்னேற்றம் கண்டுள்ளதாக சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் க.ஈ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சங்கத்தின் மின்தறியாலை கட்டிடத்தில் நடைபெற்ற முதலாவது பொதுச்சபைக் கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கப் பணியாளர்கள் ஒருமித்து என்னைத் தலைமை தாங்கி வழிநடத்துமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க கடந்த மாதம் 30 ஆம் திகதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நியமிக்கப்பட்டு பணிப்பாளர் சபையில் தலைமையேற்று செயற்பட்டு வருகிறேன்.

நான் பதவி ஏற்கும் பொழுது நிதி நிலை மோசமாக இருந்தது. வங்கியில் ஒரு கோடிக்கு மேல் பற்று மிகுதியிருந்ததுடன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் இருந்தது. ஆனால் தற்போது இந்நிலை மாற்றப்பட்டுள்ளது.

தற்போது வங்கியில் பற்று மீதி 50 இலட்சம் வரை குறைக்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு சம்பளம் மாதாந்தம் வழங்கப்படுகின்றது. மாதாந்த கணிப்பீட்டில் சங்கம் இலாபம் காண்கின்றது. மக்களிற்கான தேவை மேம்பட்டுள்ளது.

மின் தடையை நிவர்த்தி செய்ய மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்து எமது எரிபொருள் நிலையமூடாக மக்களுக்கு தடையற்ற எரிபொருளை வழங்கும் சேவையை மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஒளியில்லாத வீதி விளக்குகள்

(குருநகர்)

குருநகர் றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதி மற்றும் ஒழுங்கைகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி மற்றும் ஒழுங்கைகளில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் செயலிழந்து மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் மாற்றம் செய்யப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அதிகாலை இருட்டுகளில் கடற்தொழிலுக்குச் செல்பவர்கள் கொண்டு செல்லும் மரக்கோல், துடுப்பென்பன இருட்டில் மறுமுனையில் வருபவர் மீது முட்டிக் காயங்களுக்கு உள்ளாக நேர்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பகுதியில் செயலிழந்துள்ள மின்குமிழ்களை மாற்றி இரவு நேரங்களில் வீதி விளக்குகளை ஒளிர விடுமாறு மின்சார விநியோகப் பகுதியினரை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (68)



இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளையின் கீழ் கரணவாயில் புதிதாக அமைக்கப்பட்ட நீடித்த கருமபீட திறப்பு விழாவில் இலங்கை வங்கித் தலைவர் காமினி விக்கிரமசிங்க கருமபீடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதைக் காணலாம். (01)

# முரசின் இன்றைய பலன்

(08.07.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 24 ஆம் திகதி. பஞ்சமி
முன்னிரவு 8.25 வரை. நட்சத்திரம் சதயம் பிற்பகல் 3.40 வரை. சித்தயோகம்
இராகுகாலம் 4.28 - 5.58 வரை. சுபநேரம் 8.58 - 10.28 வரை.
எமகண்டம் 11.58 - 1.28 வரை. குளிகன்காலம் 2.58 - 4.28 வரை.

சோதிட ஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அரசாங்க நன்மை, சஞ்சலமும் மாற்றமும், வீண் குழப்பங்கள், தொழில் துறையில் நட்டம். |
| ரிஷபம் | பொருளாதார வாக்குவாதங்களைத் தவிர்க்கவும், குடும்ப உறவில் விரிசல், சஞ்சலம் |
| மிதுனம் | சுலப நன்மை, இருப்பிட வசதிகள், சிறப்புப் பெறும் நாள், பெற்றோர் மனநிறைவு. |
| கடகம் | பயணம் கூடாது, இலட்சியக் கனவுகள் நிறைவேறும், தைரியமாக இருப்பீர்கள், திருமணம் கூடிவரும். |
| சிம்மம் | குடும்ப சுகம், கடன்பட நேரிடும், உடன் பிறப்பால் உதவி, அயலவர் மரியாதை. |
| கன்னி | பகை அதிகரிப்பு, இறுக்கமான குடும்ப உறவு, அதிதிகள் ஆதரவு, ஸ்தல யாத்திரை. |
| துலாம் | உதவி, முதலீடுகளை ஒத்திப் போடவும், கடன் படுவதால் சிரமம், பயண அலைச்சல். |
| விருச்சிகம் | சுபச் செலவ, குடும்பத்தில் கலகலப்பு, சொத்துப் பிரச்சினை தீரும், சுபகாரியங்கள் |
| தனுசு | ஆாவம், வாக்குறுதி காப்பாற்றுவீர், கடன் தொல்லை தீரும், நினைத்த காரியம் நிறைவேறும். |
| மகரம் | குடும்ப சுகம், புது முயற்சி ஆரம்பிக்கலாம், வழகககுகளில் வெற்றி, குடும்பத்தில் சுபகாரியம். |
| கும்பம் | உற்சாகம், சிரம பரிகாரம், மனைவி நலனில் அக்கறை, கடன்களால் தொல்லை. |
| மீனம் | ஞாபக மறதி, காரியானுகூலம், புது முயற்சி, தவிர்க்கவும், பிரயாண இலாபம். |

# குடிபோதையில் இடையூறு செய்த நபருக்கு சிறைத் தண்டனை

(திருநெல்வேலி)

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோவிலடிப் பகுதியில் நபர் ஒருவர் மூக்கு முட்டக் குடித்துவிட்டு போதை தலைக்கேறிய நிலையில் வீதியில் போக்குவரத்து செய்த பொது மக்களுக்கு பெரும் இடையூறுகளை விளைவித்துக் கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

பொலிஸார் இவரை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது இவரை விசாரணை செய்த நீதவான் மா.கணேசராஜா இவரைக் குற்றவாளியாகக் கண்டு இவருக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.


அபராதம் செலுத்தத் தவறின் ஒருமாத கால சிறைத் தண்டனை என தீர்ப்பளிக்கப் பட்டது. இவர் அபராதம் செலுத்தாமையினால் இரண்டு வார கால சிறைத்தண்டனையுடன் மேலும் ஒரு மாத காலம் சிறைக்கூண்டில் இருக்கவேண்டிய நிலைக்குள்ளானார். (137)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பளை பிரதேச செயலக கலாசாரப் பிரிவு நடாத்தும் 'உயிரினும் மேலாக எம் பண்பாட்டை பேணிடுவோம்' எனும் பண்பாட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு யாழ். மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் கே.வேல் சிவானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.



யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நேற்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் வலுவிழந்தோருக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றது. இதன்போது ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டபோட்டியையும், பெண்களுக்கான சங்கீதக் கதிரை நிகழ்வையும் காணலாம்.

(படம் : பார்த்திபன்)

# பலவீனமான அணி

ஒலிம்பிக் போட்டிக்கான பிரேசில் கால்பந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அணியில் மொத்தம் 22 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதால், மிகவும் பலவீனமான அணியை தேர்வு செய்துள்ளதாக முன்னாள் நட்சத்திர வீரர் ரொமாரியோ கடுமையாக விமர்சித்துள்ளார்.

# மூன்றாவது டெஸ்ட் இன்று

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று பல்லேகல விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. ஏற்கனவே, முதல் டெஸ்ட்போட்டியை வென்று தொடரில் முன்னிலைவகிக்கும் இலங்கை அணிக்கு இப்போட்டியை சமநிலைப்படுத்தினாலே தொடரை வெல்ல முடியும். அதேவேளை,இப்போட்டியில் வெல்வதன் மூலமே தொடரை சமப்படுத்த முடியும் என்ற நெருக்கடியான நிலையில் பாகிஸ்தான் உள்ளது. இந்நிலையில் இப்போட்டி இரு அணிகளும் முக்கியத்துவம் மிக்கதொன்ற அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# உள்நாட்டு வீரர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பிறீமியர் லீக் தொடருக்கான முழு அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வீரர்கள் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு இலங்கையின் உள்நாட்டு வீரர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இந்தப் பட்டியலில் உயர்நிலை வீரர்களாக அதிக பெறுமதியுடைய வீரர்களாக 6 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். சனத் ஜெயசூரிய, டினேஷ் சந்திமால், சாமர கப்புகெதர, நுவான் குலசேகர, திஸ்ஸர பெரேரா, ரங்கன ஹேரத் ஆகியோர் 35,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 24 பேரைக் கொண்ட அணியாக அறிவிக்கப்பட்டுள்ள இவ்வணியில் 8 வெளிநாட்டு வீரர்களும், 16 உள்ளூர் வீரர்களும் காணப்படுகின்றனர். இந்த 24 பேரிலிருந்து அணிக்கு 18 வீரர்கள் தெரிவுசெய்யப்பட, மிகுதி 6 பேரும் தற்காலிக அணியாகக் காணப்படுவர். 18 பேர் கொண்ட அணியிலுள்ள வீரர் ஒருவர் காயமடைந்தால் அவருக்குப் பதிலாக இந்த 6 பேரிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்படுவர்.

# முன்னாள் வீரர் சுட்டுக்கொலை

(புதுடெல்லி)

டில்லியை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜய் தியாகி. 47 வயதான இவர் டில்லி காசியாபாத்தில் உள்ள இராணுவத்துக்கான ஆயுதங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். நேற்று முன்தினம் மாலை பணி முடிந்து அஜய் தியாகி வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பி சென்று விட்டார். இரத்த-வெள்ளத்தில் மிதந்த அஜய் தியாகி பரிதாபமாக மரணம் அடைந்தார். மரணம் அடைந்த அஜய் தியாகி, இந்திய கிரிக்கெட் அணி வீரர் சுரேஷ் ரெய்னாவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது.

# வலுவான அணி அமைந்ததே கிண்ணம் வெல்லக் காரணம்


(புதுடெல்லி)



இந்திய அணி உலக கிண்ணத்தை வென்றதற்கு டோனியின் திறமையான வழிகாட்டுதலுடன் வலுவான அணி அமைந்ததே முக்கிய காரணம் என்று சேவாக் கூறியுள்ளார். நொய்டாவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற சேவாக், இது குறித்து கூறியதாவது: அனுபவ வீரர்கள் அடங்கிய மிக வலுவான அணி டோனிக்கு கிடைத்தது.

சிறந்த அணி அமைந்துவிட்டால் வெற்றி தானாகவே வரும். அவுஸ்ரேலிய அணி ஒரு காலகட்டத்தில் இப்படித்தான் ஆதிக்கம் செலுத்தியது. இந்தியா 28 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பையை வென்றதற்கும், டோனி தலைமையில் வலுவான அணி அமைந்ததே முக்கிய காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விளையாடத் தடை



(நியூயோர்க்)

இங்கிலாந்து முன்னாள் கால்பந்து கப்டன் டேவிட் பெக்காமுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சி அணிக்காக விளையாடி வரும் இங்கிலாந்து அணி முன்னாள் கப்டன் டேவிட் பெக்காம், எதிரணி வீரரை காயப்படுத்தும் வகையில் பந்தை வேண்டுமென்றே முரட்டுத்தனமாக உதைத்ததாக புகார் எழுந்தது.

இதையடுத்து, ஒரு போட்டியில் விளையாட பெக்காமுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# யாரும் தலையிட முடியாது

(லண்டன்)

கிரிக்கெட்டில் எனது வருங்காலம் குறித்து நான் எடுக்கும் முடிவில் யாரும் தலையிட முடியாது. இது குறித்து நான் தான் முடிவு எடுக்க வேண்டும் என இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

நான் எனது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்புகிறேன். இது குறித்து நான் இந்திய கிரிக்கெட் சபையிடம் வேண்டுகோள் விடுத்து இலங்கை பயணத்தில் இருந்து ஓய்வு முடிவுக்கு அனுமதி பெற்றேன். எனது குழந்தைகளுடன் நேரத்தை செலவிட வேண்டியதின் முக்கியத்துவம் கருதி இந்த முடிவை எடுத்தேன்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் என்ன செய்வேன் என்பது குறித்து நான் இப்போது எதுவும் சிந்திக்கவில்லை. அந்த நேரம் வந்த பிறகு அது குறித்து நான் சிந்திக்க தொடங்குவேன். அதனைப் பற்றி நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஒவ்வொரு நபரும் வெவ்வேறு மாதிரியாக சிந்திப்பார்கள். 2006ஆம் ஆண்டில் நான் ஆட்டத்தில் தொடர வேண்டுமா? அல்லது ஓய்வு பெற வேண்டுமா? என்பது குறித்து வெவ்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக சிந்திப்பார்கள். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது நமக்கு தெரியாது.

அதுபோல் நான் என்ன நினைக்கிறேன் என்பது பலருக்கு தெரியாது. கிரிக்கெட்டில் எனது வருங்காலம் குறித்து நான் எடுக்கும் முடிவில் யாரும் தலை யிட முடியாது. இது குறித்து நான் தான் முடிவு எடுக்க வேண்டும். கிரிக்கெட் மீதான தாகம் என்னிடம் அதிகரித்திருக்கின்றது. எனது ஆடுந்திறன்கூட கூர்மையடைந்திருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெடரர், ஜோகோவிச் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டி நேரில் தனது மனைவியுடன் கண்டு மகிழ்ந்த இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரைக் காணலாம்.

# பெடரர் – முர்ரே இன்று பலப்பரீட்சை



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் ஆண்கள் தனிநபர் போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் மற்றும் இங்கிலாந்தின் அன்டி முரே ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

முதலாவது அரையிறுதிப் போட்டியின் உலகின் 3ஆம் நிலை வீரரான ரொஜர் பெடரரும், முதல்நிலை வீரரான நொவக் ஜொக்கோவிக்கும் மோதினர். இருவரும் அண்மையில் சந்தித்த வேளைகளில் ஜோகோவிக் பெற்றுக் கொண்ட வெற்றிகளை வைத்து இப்போட்டியிலும் ஜோகோவிக் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் மிகச்சிறப்பாக ஆடிய ரொஜர் பெடரர், 6-3, 3-6, 6-4, 6-3 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். இது விம்பிள்டன் இறுதிப் போட்டிகளுக்கு அவர் தெரிவாகும் 8ஆவது சந்தர்ப்பமாகும்.

இம்முறை அவர் பட்டம் வென்றால் அவரது ஏழாவது விம்பிள்டன் பட்டமாக இது அமையும்.

அவர் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றால் அதிக விம்பிள்டன் பட்டங்களை வென்றவர் என்ற பீற்றர் சாம்ராஸின் சாதனையை பெடரர் சமன் செய்வார் என்பதோடு, ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தையும் கைப்பற்றிக் கொள்வார்.

அவ்வாறு கைப்பற்றிக் கொள்வாராயின் சாம்ராஸின் இன்னொரு சாதனையான அதிக வாரங்கள் முதலிடத்தில் காணப்பட்ட சாதனையையும் பெடரர் சமன் செய்வார். அது 286 வாரங்களாகும்.

இதேவேளை, மற்றைய அரையிறுதியில் 4ஆம் நிலை வீரரான அன்டி முர்ரே, 5ஆம் நிலை வீரரான ஜோ வில்பிரட் சொங்காவை 6-3, 6-4, 3-6, 7-5 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இந்த போட்டியை பார்க்க ஒரு டிக்கெட் ரூ.3.5 லட்சம் வரை விற்பனையாகி புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. விம்பிள்டன் மைய களத்துக்கான ஒரு டிக்கெட் விலை ரூ.8,000 மட்டுமே. இந்த டிக்கெட்டை ஏற்கனவே வாங்கியவர்கள், ஆன் லைனில் கொள்ளை லாபத்துக்கு கை மாற்றியிருக்கிறார்கள். இங்கிலாந்தில் நடக்கும் இந்த போட்டியில், 1936இல் பிரெட் பெர்ரி என்ற உள்ளூர் வீரர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். 1938இல் ஆஸ்டின் என்ற வீரர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். அதன் பிறகு அன்டி முர்ரே தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத் தெரிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வழி நடத்தலில் மக்கள் வங்கி அனுசரணையுடன் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டி வயது எல்லை அடிப்படையில் இடம்பெறவுள்ளது.

இதில் 14 வயதுக்கு கீழ் உட்பட்டோரும் 21 வயதுக்கு கீழ்ப் பட்டோருமே பங்குபற்ற முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் எதிர்வரும் 14,15ஆம் திகதிகளில் நாலப்பிட்டியில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும் எனவும், இப்போட்டிகளின் போது திறமையான வீராங்கனைகள் இனங்காணப்படுவார்கள் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாண மட்ட விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் விசேட தேவையுடையமாணவர்களுக்கான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாக மாகாணகல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், இதில் 12 கல்வி வலயங்களிலுள்ள விசேட தேவையுடை வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாகவும், போட்டியில் பங்குகொள்ள வீர, வீராங்னைகளை சிறந்த முறையில் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரியின் றொமையின் குக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சி.க. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## விபத்தில் பறிபோனது கண்



பார்முலா 1 கார்பந்தய சோதனை ஓட்ட வீராங்கனை மரியா டி வில்லோட்டா, லண்டனில் கடந்த செவ்வாயன்று நடந்த பயிற்சியின் போது விபத்தில் சிக்கினார். இதில் அவரது வலது கண் பார்வை பறிபோனதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. மழை பெய்து கொண்டிருந்த சமயத்தில் மணிக்கு 200 மைல் வேகத்தில் காரை விரட்டிய மரியா, திடீரென கட்டுப்பாட்டை இழந்து களத்தின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த டிரக் ஒன்றின் மீது மோதியதில் படுகாயம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது.





சாவகச்சேரி நகர் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் விளையாட்டு விழா கடந்த 1ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க கல்லூரி மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். சிறிஸ்கந்தமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இப்போட்டி நிகழ்வின்போது சிறார்கள் கயிறு இழுத்தலுக்கு தயார் நிலையில் நிற்பதையும், பரிசில்கள் வழங்குவதையும் காணலாம்.

## வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி

# புதிய சாதனைகளும் போட்டி முடிவுகளும்

### 400 மீற்றர் : 15 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| பி. தனுஜா | விசுவமடு ம.வி. | 1.06.8 |
| வை.சரனிஜா | ஓமாந்தை மத்திய கல்லூரி | 1.09.2 |
| கே.ஜே.நிசாந்தினி | முருங்கன் ம.வி. | 1.10.2 |
| மேரி எறோமி | அல்லைப்பிட்டி பரசத்தி வி. | 1.14.3 |

### 400 மீற்றர் : 19 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| கே. சகிதா | கிளிநொச்சி இந்துக் கல். | 01.04.6 |
| யுலிட் ஜாமினி | நானாட்டான் ம.வி. | 01.05.2 |
| எஸ். லக்ஷனா | இராமநாதன் கல்லூரி | 01.08.2 |
| எம்.சர்மிகாதேவி | சைவப்பிரகாச மகளிர் கல். | 01.09.5 |

### நீளம் பாய்தல் : 15 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| எஸ்.பிரியதர்சினி | கௌரிஅம்பாள் ஜி.ரி.எம்.எஸ் | 04.65 |
| எஸ்.அரணி | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 04.58 |
| எஸ்.டிலக்ஷி | செக்கட்டிப்புலவு ஜிரிஎம்எஸ் | 04.44 |
| வி.சத்விகா | அருணோதயாக் கல்லூரி | 04.44 |

### மாகாண மட்ட புதிய சாதனைகள்

| பெயர் | பாடசாலை | வயது/பிரிவு | போட்டி | பழைய சாதனை | புதிய சாதனை |
|---|---|---|---|---|---|
| எஸ். தனுஜா | அருணோதயாக் கல்லூரி | 21 வயது பெண் | உயரம் பாய்தல் | 1.47 | 1.50 |
| ஏ.கொகைறோசன் | அருணோதயாக் கல்லூரி | 19 வயது ஆண் | கோலூன்றிப் பாய்தல் | 3.41 | 3.70 |
| பி.லவணன் | அருணோதயாக் கல்லூரி | 19 வயது ஆண் | கோலூன்றிப் பாய்தல் | 3.41 | 3.50 |
| எஸ்.பானுஜா | யாழ். இந்து மகளிர் கல்லூரி | 21 வயது பெண் | நீளம் பாய்தல் | 4.72 | 4.81 |
| பி.பிரியதர்சினி | அருணோதயாக் கல்லூரி | 21 வயது பெண் | நீளம் பாய்தல் | 4.72 | 4.75 |
| ஈ.காவேரி | அருணோதயாக் கல்லூரி | 21 வயது பெண் | 100 மீற்றர் | 14.2 | 13.9 |
| பி. தனுஜா | விசுவமடு ம.வி. | 15 வயது பெண் | 400 மீற்றர் | 1:09.9 | 1:06.8 |
| வை.சரன்ஜா | ஓமாந்தை மத்திய கல்லூரி | 15 வயது பெண் | 400 மீற்றர் | 1:09.9 | 1:09.2 |
| பி.ரஜிதா | விக்டோரியாக் கல்லூரி | 19 வயது பெண் | ஈட்டி எறிதல் | 28.40 | 30.35 |
| ஏ.அனோஜன் | சென். ஜோன்ஸ் கல்லூரி | 19 வயது ஆண் | 1500 மீற்றர் | 4:30.90 | 4:19.9 |
| எஸ்.சிவகுமார் | அடம்பன் ம.வி. | 19 வயது ஆண் | 1500 மீற்றர் | 4:30.90 | 4:29.3 |
| ஆர்.தர்சிகா | வவுனியா தமிழ் மத்திய ம.வி. | 19 வயது பெண் | தட்டெறிதல் | 25.48 | 30:91 |
| எஸ்.கீர்த்திகா | தெல்லிப்பளை யூனியன் கல்லூரி | 19 வயது பெண் | தட்டெறிதல் | 25.48 | 26.06 |
| எஸ்.சுகன்ஜா | விக்டோரியாக் கல்லூரி | 19 வயது பெண் | தட்டெறிதல் | 25.48 | 25.60 |
| கே.லேஹஜினி | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 21 வயது பெண் | 400 மீ. தடைதண்டல் | 1:18.0 | 1:07.5 |
| எம். ஜோய்காருன்ஜா | சுண்டுக்குழி மகளிர் கல்லூரி | 17 வயது பெண் | நீளம் பாய்தல் | 4.71 | 4.90 |
| ரி.நகாமைல் | பூம்புகார் கண்ணகை வித்தி. | 17 வயது பெண் | நீளம் பாய்தல் | 4.71 | 4.71 |
| ஏ.அனற் | மாதகல் சென். ஜோசப் ம.வி. | 17 வயது பெண் | 400 மீற்றர் | 1:04.60 | 1:02.6 |
| கே.சகிதா | கிளிநொச்சி இந்துக் கல்லூரி | 19 வயது பெண் | 400 மீற்றர் | 1:06.20 | 1:04.6 |
| சி.யூட் ஜெனனி | நானாட்டன் ம.வி. | 19 வயது பெண் | 400 மீற்றர் | 1:06.20 | 1:05.2 |
| ஆர்.சாளினி | புதுக்குளம் ம.வி. | 19 வயது பெண் | 800 மீற்றர் | 2:41.7 | 2:39.7 |
| சி.ஜெனோஜன் | வவுனியா தமிழ் மத்திய ம.வி. | 17 வயது ஆண் | குண்டெறிதல் | 11.98 | 12.18 |
| ரி.வினோஜினி | வவுனியா தமிழ் மத்திய ம.வி. | 21 வயது பெண் | 800 மீற்றர் | 2:41.9 | 2:38.8 |
| ஆர்.செந்தூரன் | யாழ். இந்துக் கல்லூரி | 17 வயது ஆண் | உயரம் பாய்தல் | 1.85 | 1.85 |
| ஈ. காவேரி | அருணோதயாக் கல்லூரி | 21 வயது பெண் | கோலூன்றிப் பாய்தல் | 2.30 | 2.75 |
| எஸ்.தனுஜா | அருணோதயாக் கல்லூரி | 21 வயது பெண் | கோலூன்றிப் பாய்தல் | 2.30 | 2.75 |

### உயரம் பாய்தல் : 21 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| எஸ். பானுஜா | யாழ். இந்து மகளிர் கல்லூரி | 04.81 |
| பி.பிரியதர்சினி | அருணோதயாக் கல்லூரி | 04.75 |
| வி.தனுசிகா | அல்மினா ம.வி. | 04.69 |
| என்.யாழினி | சித்திவிநாயகர் இந்து கல். | 04.62 |

### முப்பாய்ச்சல் : 19 வயது ஆண்கள

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| எஸ். டக்ஷன் | யாழ். இந்துக் கல்லூரி | 12.69 |
| எஸ்.சஜீவன் | யாழ். மத்திய கல்லூரி | 12.46 |
| வி.ஜஸ்மினன் | யாழ். இந்துக் கல்லூரி | 12.04 |
| அன்ரூ டிலக்ஷன் | நானாட்டன் ம.வி. | 12.04 |

### கோலூன்றிப் பாய்தல் : 19 வயது ஆண்கள

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஏ.கொகைறோசன் | அருணோதயாக் கல்லூரி | 03.70 |
| பி.லவணன் | அருணோதயாக் கல்லூரி | 03.50 |
| அன்ரனி பிரசாத் | மகாஜனாக் கல்லூரி | 03.40 |
| வி.விஜிகரன் | ஹாட்லிக் கல்லூரி | 03.30 |


### ஈட்டி எறிதல் : 21 வயது ஆண்கள

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஏ.சியானியஸ் | சென். சாள்ஸ் ம.வி. | 50.50 |
| எஸ்.அருண்குமார் | கல்மடு ம.வி. | 48.30 |
| ஆர்.விதுசனன் | யாழ். மத்திய கல்லூரி | 42.85 |
| எல்.ஜதவன் | புதுக்குடியிருப்பு மத்திய கல். | 41.77 |

# தலைமை

பறவைகள் வானத்தில் ஆங்கில "ஏ" வடிவில் பறப்பதை பார்த்திருக்கிறோம். ஆனால் அதன் பின்னணியில் இருக்கும் விஷயங்களை அறிந்த போது ஆச்சரியமாக இருக்கிறது. பெரும்பாலும் பறவைகள் குளிர்கால நிலையிலிருந்து தப்பித்து கொள்வதற்காக உஷ்ணப்பிரதேசங்களை நோக்கி கூட்டங்கூட்டமாக இடம் பெயருகின்றன.

இந்த வகையில் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரங்களைக் கூட இவை கடக்கின்றன. எனவே இவை தனியாகப் பறப்பதில்லை. தனியாக பறந்தால் பாதுகாப்பு உறுதியற்ற நிலையோடு முழுக்காற்றின் எதிர்ப்பையும் தனி ஒருவராகவே சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.




மேற்கண்ட உருவில் உள்ளவாறு பறவைகள் "ஏ" வடிவில் கூட்டமாக பறக்கும்போது காற்றின் எதிர்ப்பை பகிர்ந்து கொள்வதோடு அனைத்துப் பறவைகளின் இறக்கை அசைவும் "ஏ" அமைப்பின் கூரான அமைப்பும் காற்றை கிழித்துக் கொண்டு இலகுவாக பயணம் செய்ய உதவுகின்றன. இதனால் மிக நீண்டதூர பயணங்கள் சாத்தியமாகின்றன.

மேற்கண்ட படத்தில் பறவை A ஆனது தலைமை தாங்குவதுடன் காற்றின் அழுத்தத்தை கணிசமான அளவு எதிர்கொள்ளுகிறது. பறவை "C" ஆகக்குறைந்த காற்றழுத்தத்தை எதிர் கொள்வதுடன் அதற்கு பறப்பதும் இலகு.

எனவே நீண்டதூரப் பயணத்தில் தலைவன் "A" களைப்படையும் போது பறவை B ஆனது A இன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள பறவை A ஆனது பறவை C இன் இடத்திற்கு செல்லும். இதன் போது பறவை A ஆனது பறக்கும் வேளையில் சற்று ஓய்வெடுத்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். பறவை B ஆனது பறவை A க்குப் பக்கத்தில் பறந்ததனால் A யின் நடவடிக்கைகளை அவதானித்து A இன் பொறுப்பை எடுத்துக் கொள்வது இலகுவாக இருக்கும். இந்த நிலையில் பறவை C ஆனது D இன் இடத்துக்கு செல்லும். அதாவது தலைமைப் பொறுப்பை நோக்கிச் செல்லும்.

ஒருவேளை பறவை ஏதாவது நோய்வாய்ப்பட்டு அல்லது ஒரே வேகத்தில் பறக்க இயலாது போகும்போது அப்பறவை இந்த பறவைக் கூட்டத்திலிருந்து சற்று பின்வாங்கும். எனவே அந்தப் பறவைக்கு உதவியாகவும் அந்த பறவையை உற்சாகமூட்டும் வகையிலும் பெரிய கூட்டத்திலிருந்து சில பறவைகள் பிரிந்து வந்து அந்த நோய்வாய்ப்பட்ட பறவையுடன் சேர்ந்து சிறிய V வடிவில் பயணிக்கும். நோய்வாய்ப்பட்ட பறவை இறக்கும்வரை அல்லது அப்பறவை சுகமடைந்து வரும்வரை குறித்த அப் பறவைகள் அதனுடன் கூட்டாகப் பறக்கும். சுகமுற்றதும் அல்லது இறந்ததும் ஏனைய பறவைகள் தமது பிரதான கூட்டத்துடன் இணைந்து கொள்ளும்.

பறவைகளின் இந்த இயக்கத்திலிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியவையும் ஏராளம் உண்டு. தலைமைப் பொறுப்பு என்பது பகிரப்படவேண்டிய ஒன்றோடு அது பயிற்றுவிக்கப்பட வேண்டியதும் பயில வேண்டியதுமான ஒன்றாகும்.

இன்று பொது அமைப்புகளில் பதவிகளிலுள்ள பலரும் தமது பதவியை பிறருக்கு விட்டுக்கொடுக்க முடியாத ஒரு மனநிலையுடனே இருக்கின்றனர். அ்ரச பதவிகளைக் கூட மீள்நியமனம் என்ற வகையில் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்கின்றனர். இதனால் இளையோருக்கான வாய்ப்புக்கள் மறுதலிக்கப்படுவதுடன் அவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ள இடமில்லாதும் போகின்றது. எனவே விட்டுக் கொடுக்கும் இயல்புகளை தலைவர்கள் வளர்த்துக் கொண்டால் தான் நாமும் நீண்டதூரம் பயணிக்க முடியும்..!

- ஏ.கே. -




# வாரியார் அளித்த விளக்கம்!



ஒரு முறை வாரியார், ரயில் பயணம் செய்து கொண்டிருந்த போது, எதிர் சீற்றில் அமர்ந்திருந்த இளைஞர், "சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள் கண்ணாடியைப் போட்டுக் கொள்ளுங்கள் என்கிறோம். வாய் வழியே உண்ணும் பொருட்களை, "சாப்பிடுங்கள்" என்கிறோம். ஆனால், சாப்பிடும் வெற்றிலையை மட்டும், "வெற்றிலை போட்டுக் கொள்ளுங்கள்" என்று ஏன் சொல்கிறோம்?" என்று கேட்டார். அதற்கு வாரியார், "பசியை அகற்றும் பொருட்களைத் தான் சாப்பிடுங்கள் என்கிறோம். அலங்காரப் பொருட்களை, அதாவது, கழுத்துக்குச் செயின், காதுக்குத் தோடு, கைக்கு வளையல், இவைகளைப் போட்டுக் கொள்ளுங்கள் என்கிறோம். வெற்றிலை போடுவதும், ஒரு வகையான அலங்காரப் பொருள். அதனால் அதை, "போட்டுக் கொள்வது" என்று சொல்வதுதான் சரி..." என்றார்.

# ரப்பர் சேர்ப்பு!



உங்கள் வீட்டில், படிக்கும் பிள்ளைகள் இருந்தால், அவர்கள் மூலம் அதிகபட்சம் இரண்டு அழிரப்பர்கள் தேடி எடுக்கலாம், பழசை தூக்கி எறியாதவர்களாக இருந்தால், கூடுதலாக நான்கு ரப்பர்கள் கிடைக்கலாம். ஆனால், சென்னையைச் சேர்ந்த, ஆசியமரிலியா, மூவாயிரத்து ஐநூறு ரப்பர்களை சேகரித்து வைத்துள்ளார். இதில், ஒரு ரப்பர் போல இன்னோரு ரப்பர் இல்லை என்பதுதான் விசேஷம். இப்போது பல் மருத்துவராக இருக்கும் மரிலியாவிற்கு, எட்டு வயதில் இருந்தே, ரப்பர் மீது ஆர்வம் வந்து விட்டது. அதுவும், வாசனையுடன் கூடிய ரப்பர் வந்த பின், அதில், வித விதமாய் வாங்கி குவிக்க ஆரம்பித்தார். இவரது ஆர்வத்தை பார்த்த பெற்றோரும், உறவினர்களும் இதை ஊக்கப்படுத்தவே, வித விதமாய் ரப்பர் சேகரிப்பதில், முன்னிலும் ஆர்வமாய் ஈடுபட்டார்.

சிங்கப்பூர், மலேசியா, ஹொங்கொங் என்று எங்கு சென்றாலும், இவர் எழுது பொருள் கடை எங்கே இருக்கிறது என்று கேட்டு, அங்கு போய், தன்னிடம் இல்லாத ரப்பர் இருக்கிறதா என தேடிப் பிடித்து வாங்கி வருவாராம். இவரிடம் உள்ள ரப்பர்களில், ஒரு ரூபாய் ரப்பரும் உண்டு, இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் விலையுள்ள ரப்பரும் உண்டு.

ரப்பர்களிலேயே ஹொங்கொங் ரப்பர்கள் தான், 'தி பெஸ்ட்' என்கிறார். காரணம், பத்து வருடத்திற்கு முன் வாங்கும் போது ரப்பரில் இருந்த வாசனை இன்னும்கூட குறையாமல் இருக்கிறது என்கிறார். மேலும், ரப்பர் தயாரிப்பில் அவர்கள் காட்டும் கலையம்சமே தனி. ஒரு சிற்பம் போல வடிவமைப்பர் என்கிறார். பாலருந்தும் குழந்தை, கேக், உரித்த வாழைப்பழம், மண்டையோடு, எலும்புத்துண்டு, க்யூப் விளையாட்டு சாதனம், பர்கர், பிட்சா, சுவிட்ச்போர்ட் என்று பல்வேறு வடிவங்களில் ரப்பர்கள் நிறைந்து கிடக்கின்றன.

ரப்பரை சேகரிப்பதை விட அதை பாதுகாப்பதும், பராமரிப்பதும்தான் கடினம் என்கிறார். கொஞ்சநாள் விட்டால், ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு, ஒன்றுக்கும் ஆகாமல் போய் விடும், ஆகவே, பத்திரமாக பார்த்துக் கொள்வதற்குத்தான் அதிக செலவு என்கிறார். "இது, என் தனிப்பட்ட சந்தோஷத்திற்காகவும், விருப்பத்திற்காகவும் செய்த சேகரிப்பு. ஆனால், இதை சமீபகாலமாக பார்க்கும் என் நண்பர்கள், கின்னஸ் சாதனைக்கு முயற்சி செய்யலாமே என்கின்றனர். தற்போது, அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளேன். அந்த முயற்சி வெற்றி பெறும்போது, பொது மக்கள் பார்வைக்கு ஒரு இடத்தில் காட்சிக்கு வைப்பேன்..." என்கிறார் மரிலியா.

கடைசியில் அவர் சொன்ன தகவல், "இவ்வளவு ரப்பர் இருந்தபோதும், ஒரு ரப்பரைக்கூட நான் அழிப்பதற்கு உபயோகித்தது இல்லை..." "அப்படியானால் தப்பாகவே எழுதியது இல்லையா..." "அப்படியில்லை, தப்பாக எழுதியபோது அழிப்பதற்கு, அப்போது என் தோழியரிடம் இருந்து ரப்பரை கடனாக வாங்கியிருக்கிறேன்..." என்கிறார் சிரிப்போடு.

# தந்தை மண்




மலேசியாவில் நான் சந்தித்தவர்களில் முக்கியமான ஒருவரான மனித உரிமைப் போராளி திரு கா.ஆறுமுகம், மலேசியத் தமிழர்களின் வரலாற்றில் மூன்று முக்கிய கணங்களை நினைவு கூர்ந்தார். முதலாவது 1923இல் நடைபெற்ற பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் முதல் வருகை. தமிழர்கள் மத்தியில் இன உணர்வும், ஒற்றுமையும், போராட்ட ஊக்கமும் இந்த வருகையின் மூலம் எங்களுக்குக் கிட்டியது என்றார் ஆறுமுகம். மலேசியத் திராவிடர் கழகம் இதைச் சாத்தியப் படுத்தியுள்ளது. இரண்டாவது வரலாற்று நிகழ்வாக அவர் குறிப்பிட்டது 1940களில் சுபாஷ் சந்திரபோசின் வருகை. மலேசியாவைத் தளமாகக் கொண்டுதான் அவர் இந்திய தேசிய இராணுவத்தைக் கட்டமைத்தார். "டில்லி சலோ" என்கிற முழக்கத்துடன் பர்மாவரை சென்ற அந்த இராணுவத்தில் மலேசியத் தமிழர்கள் பெரும் பங்காற்றினர். உலகையே ஒரு கொடியின் கீழ் ஆண்ட ஒரு ஏகாதிபத்தியத்தையே எதிர்த்துக் களம் கண்டு உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்கிற தெம்பையும் திராணியையும் போசின் வருகை தமிழர்கள் மத்தியில் உருவாக்கியது.

மூன்றாவதாக அவர் குறிப்பிடப்போகும் கணத்தை அறிய மிக்க ஆவலுடன் காத்திருந்தேன். பாசிச எதிர்ப்பு முன்னணி ஒன்றை அமைத்து ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும், ஜப்பானியர்கள் விரட்டப்பட்ட பின்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்திய மலேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கத்தைத்தான் சொல்லப் போகிறார் என்பது என் எதிர்பார்ப்பு. எனது மார்க்ஸீய ஈடுபாட்டின்பாற்பட்ட எதிர்பார்ப்பு மட்டுமல்ல அது. அதில் முக்கிய பங்காற்றியவர்களில் என் தந்தையும் ஒருவர், மலேசியப் பயணம் என்றவுடன் அவரது நினைவுகளைச் சுமந்து கொண்டுதான் நான் விமானம் ஏறியிருந்தேன்.

இதுவரை வெளிநாடுகள் சென்றபோதெல்லாம் ஏற்பட்டிராத ஏதோ ஒரு வகைப் பதட்டமும், துடிப்பும், ஆர்வமும் என்னுள் நிறைந்திருந்தது. எனது 62 ஆண்டு கால வாழ்வில் நான் சந்தித்த எத்தனையோ மனிதர்களில் என் மனத்தில் நீங்கா இடம்பிடித்தவர்களில் என் தந்தை முக்கியமானவர். அந்தப் பற்று ஒரு தந்தை என்கிற வகையில் அவர் மீது எனக்கு ஏற்பட்டதல்ல. சொல்லப்போனால் ஒரு தந்தை என்கிற வகையில் அவர் எனக்கோ என் தம்பி தங்கைகட்கோ எந்தக் கடமையையும் ஆற்றியதில்லை. கொஞ்சமும் பொறுப்பற்று வாழ்ந்து மிகப் பெரிய சுமைகளை என் மீது சுமத்திவிட்டுச் சென்றவர் அவர். ஒரு தந்தை என்ற வகையில் அவரை வெறுப்பதற்கே எனக்குக் காரணங்கள் அதிகம் உள்ளன. ஆனால் உலகையும் மனிதர்களையும் வேறு விதமாகப் பார்க்க அவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார். மனிதர்கள் மீது அளப்பரிய நேசத்தைச் செலுத்துவது எப்படி என்பதை அவர் என் கண்முன் வாழ்ந்து காட்டினார்.

14 வயதில் பெற்றோரிடமிருந்து பிரிந்து முற்றிலும் ஒரு புதிய நாட்டில் ஒரு குழந்தைத் தொழிலாளியாக அவர் கால் பதித்த மண், எட்டாம் வகுப்புடன் படிப்பு முடிந்துபோனபின்பும் உலக அரசியலையும் மார்க்ஸீயத்தையும் அவர் கற்றுத் தேர்ந்த மண், சிலாங்கூர் மாகாண அகில மலேயத் தொழிற்சங்கத்தின் ஸ்தாபனத் தலைவராகவும், கட்சிப் பத்திரிகையான "ஜனநாயகம்" இதழின் ஆசிரியராகவும் அவர் செயல்பட்ட மண், திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து வந்து தோட்டத் தொழிலாளியாக வாழ்ந்த பழனியப்பனின் அனாதையாக்கப்பட்ட இரு தலித் சிறார்களுக்கும் அவர் பொறுப்பேற்றுக்கொண்ட மண், தலைக்குப் பத்தாயிரம் வெள்ளி விலை கூறப்பட்டு ஒரு யுத்தக் கப்பலில் தமிழ் நாட்டிற்குத் தப்பியோடுவதற்குக் காரணமான மண் இது என்கிற நினைவோடு கோலாலம்பூர் விமான நிலையத்தில் கால் பதித்தபோது என்மனம் மட்டுமன்று என் உடலும் சற்றே குலுங்கியது.

- அ.மார்க்ஸ் ('நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்' தொடரிலிருந்து)

# வரலாற்றுச் சுமை!

**- அரவிந்தன் கட்டுரையிலிருந்து.**

இலங்கையின் இனப் பிரச்சினையில் வரலாற்று உணர்வும் அது ஏற்படுத்தியுள்ள உளச் சிக்கல்களும் முக்கியமானவை. குறிப்பாகத் தமிழ், சிங்களச் சமூகங்களிடம் உருவாக்கப்பட்டுள்ள வரலாற்று உணர்வென்பது அவற்றுக்கு ஒரு சுமையாகவே அமைந்துள்ளது.

உலகத்தின் பெரும்பாலான போர்களும் பிணக்குகளும் சிக்கலான வரலாற்று வேர்களாலேயே ஏற்பட்டிருக்கின்றன. வரலாற்றுச் சிக்கல்களால் இன்றுங் கூட துயரங்களைச் சுமந்து கொண்டிருக்கும் சமூகங்கள் பல உள்ளன. அவை நிரந்தர அபாயத்தைத் தம்மகத்திற் கொண்டுள்ளன.

பகையின் அடியிலிருந்து முளைக்கும் வரலாற்றுப் பார்வையானது ஒருபோதுமே நிதானத்தைத் தராது. பதிலாகச் சமனிலைக் குலைவையே தரும். சமனிலைக் குலைவுடைய வரலாற்றுப் பார்வையைக் கொண்டுள்ள எந்தச் சமூகமும் தன்னுடைய துக்கங்களைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாது.

பதிலாக அது மீள மீள உளச் சிக்கலுக்கும் வாழ்க்கைச் சிக்கலுக்குள்ளுமே தள்ளப்படும்.

எத்தகைய வரலாற்றுப் பெருமையும் அல்லது சிறுமையும் நிகழ்கால, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்வதில் தான் அர்த்தம் பெறுகின்றன. நிகழ்கால, எதிர்காலச் சிக்கல்களை வெற்றி கொள்வதற்குத் தடையாக இருக்கும் வரலாற்றுணர்வு நிச்சயமாக அந்தச் சமூகங்களுக்குச் சுமையாகவே அமைகிறது.

"இலங்கையின் ஆதிக்குடிகள் நாமே" எனத் தமிழர்கள் கூறுகின்றனர். இப்படிச் சொல்வதன்மூலம் தங்களின் வரலாறு குறுக்கமடைகிறது எனச் சிங்களவர் கருதுகின்றனர். இதனால், அவர்கள் கலவரமடைகிறார்கள்.

பதிலுக்குத் "தமிழர்களுக்கு இந்த நாடு உரித்துடையதல்ல, இது சிங்களர்களுக்கே உரியது. தமிழர்கள் வந்தேறு குடிகள்" எனச் சாடுகிறார்கள்.

நாட்டையும் சமூகங்களையும் பின்னோக்கித் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

எத்தகைய சிறப்பான அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னேற்ற நடவடிக்கைகளையும் சிதைத்துவிடும் அளவுக்கு இனமுரணும் பிணக்குகளும் உள்ளன. இதற்குக் காரணமான அல்லது காரணமாகப் பயன்படுத்தப்படும் வரலாற்றுணர்வு

இப்படி எதிர்மறையான விளக்கங்களை ஒவ்வொரு சமூகமும் கொண்டிருக்கும் போது எப்படி அவற்றிடையே அமைதியும் இணக்கமும் ஏற்படும்? இத்தகைய எதிர்நிலை எண்ணங்களைக் கொண்டிருக்கும் சமூகங்களைத் தன்னிடம் கொண்டுள்ள நாடு எவ்வாறு சமாதானத்தை எட்டமுடியும்? இத்தகைய நிலையில் அந்த நாட்டில் எவ்வாறு அமைதி நிலவும்? அது எப்படி முன்னோக்கிப் பயணிக்க முடியும்?

இலங்கை பின்னோக்கிய திசையில்தான் கடந்த காலத்திற் பயணித்துள்ளது. இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் என்ற வேறுபாடுகளும் விலக்குகளும் கிடையாது.

பொருளாதார வளர்ச்சியிலும் வாழ்க்கைத் தரத்திலும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியிலும் மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது இலங்கை.

இதிலிருந்து எப்படி மீள்வது? இதுவே இன்றைய முதன்மைக் கேள்வியாகும். இனப் பிணக்கும் முரண்களும் உள்ளது.

கடந்த காலம் பற்றிய தீவிர பிரக்ஞை நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீயிடுகிறது. இதன்மூலம் அபாயக்குழிகள் தாராளமாக முளைகொள்கின்றன. அரசியல் உள்நோக்கங்களால் செய்யப்பட்ட புனைவுருவாக்கங்கள் இன்று தமிழ் - சிங்களச் சமூகங்களின் உளவியலை நிர்ணயம் செய்யும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன.

உலகத்தின் பெரும்பாலான வரலாற்றுச் சிக்கல்கள் இந்த மாதிரி அரசியல் நோக்கில் செய்யப்படும் புனைவினாலேயே ஏற்படுகின்றன. அந்த வகையிற்தான் இலங்கையின் வரலாறும் அமைகிறது.

இதை நாம் வரலாற்றுச் சுமை என்றே சொல்லலாம்.

தமிழர்கள் தங்களுடைய தொன்மையை ஆதாரமாகக் கொண்டு, தங்களுடைய இன்றைய இருப்பை உறுதி செய்ய முயற்சிக்கிறார்கள். அதற்காக அவர்கள் சங்ககாலம் வரையிற் பயணம் செய்கிறார்கள். இன்னும் சற்று அழுத்தமாகச் சொன்னால், சங்ககாலத்திலேயே அவர்கள் நிலைகொள்கிறார்கள்.

பொதுவாகவே தமிழர்கள் அதிகமதிகம் பெருமைப்படுவது, அவர்களுடைய சங்ககாலப் பெருமைகளிலேயே. அதற்குப் பின்னர் சோழர்காலத்தில்.

ஆனால், இந்தப் பெருமைகள் எதுவும் ஈழத்தமிழர்களுக்குரியதல்ல. அப்படி இவற்றை ஈழத்தமிழர்களும் கொள்ள முற்பட்டால், அது "இந்தியாவின் வழித்தோன்றல்களே ஈழத்தமிழர்கள்" எனக் கொள்ளும் சிங்கள இனவாதிகளின் கூற்றுக்கு பொருத்தம் சேர்ப்பதாக அமையும்.

இதேவேளை சிங்கள வரலாறு இலங்கைப் பௌத்தத்தின் வரலாறாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் செறிவாகவும் இன்னும் துலக்கமான அடையாளங் களையுடையதாகவும் இந்தச் சிங்கள பௌத்த வரலாற்று ஆதாரங்கள் இருப்பது சிங்கள அதிகாரத் தரப்பினருக்கு அதிக வாய்ப்பை அளிக்கின்றது.

இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு சிங்களத்தரப்பு தன்னுடைய வரலாற்றுக் குறிப்புகளை மேம்படுத்த முனைகிறது.

இத்தகைய அரசியல் நோக்கங்கங்கொண்ட ஒரு ஏற்பாடாகவே அது மகாவம்சத்தை எழுதியதும் இன்னும் அதை முதன்மைப்படுத்துவதும்.

மகாவம்சத்துக்கு எதிரான ஒரு மனப்போக்கும் வரலாற்றுத் தேடலும் தமிழ்ச் சமூகத்தில் வலுவாக உள்ளதையும் நாம் அவதானிக்கலாம்.

ஆகவே இதுவொரு போட்டி நிலை □ பகை நிலை □ எதிர் நிலைச் செயற்பாடே.

ஒவ்வொரு சமூகத்திடமும் காணப்படும் அடையாளங்களைப் பயன்படுத்தி, அதிகாரத்தைப் பெற முனைகின்றன அதிகாரச் சக்திகள். இந்த நிலையில் இதற்குப் பலியாகின்றனர் அந்தச் சமூகங்களைச் சேர்ந்த மக்களும் எதிர் நிலையில் உள்ள சமூக மக்களும்.

உண்மையில் மக்களை எதிரெதிர் நிலைகளுக்குக் கொண்டு செல்வதும் அதிகார சக்திகளே. அவற்றின் அரசியல் நலன்களே வரலாற்றுணர்வை அதிகமதிகம் ஊட்டுகின்றன. பின்னர் இந்த வரலாற்றுணர்வென்பது அந்தந்தச் சமூகங்களின் உளவியலாகவும் பரிமாணம் பெறுகிறது. அது அப்படியே அந்தச் சமூகங்களின் ஆழ்மனதில் உறைந்து, அவற்றிற்குச் சுமையாகவும் அமைந்து விடுகிறது.

ஆகவே ஒரு வகையில் இலங்கையில் வரலாறு என்பதைத் தமிழர்களும் சிங்களவர்களும் ஒரு சுமக்க முடியாத சுமையாகச் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேணும்.

அந்த அளவுக்கு வரலாற்றுச் சுமையினால் அவர்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரலாற்றுச் சுமை அவர்களை இலகுவில் முன்னோக்கி நகரவிடாது.

# வித்தியாசமான போட்டி!




சீனாவின் செங்டு நகரத்தில், சமீபத்தில் ஒரு வித்தியாசமான போட்டி நடத்தப்பட்டது. போட்டி என்ன தெரியுமா? கார்களின் கண்ணாடி மீது, உள்ளங்கை போல் வரையப் பட்டுள்ள இடத்தில், போட்டியாளர்கள் தொடர்ச்சியாக, தங்கள் கையை வைத்திருக்க வேண்டும் யார், அதிக நேரம், கையை வைத்திருக்கின்றனரோ, அவர்களுக்கு பி.எம்.டபிள்யூ. கார், பரிசளிக்கப்படும். போட்டிக்கான விதிமுறைகள் கடுமையானவை. போட்டி யாளர்கள் ஒவ்வொருவரும், கார் கண்ணாடிகளின் மீது, தொடர்ந்து தங்கள் கைகளை வைத்திருக்க வேண்டும். இரவு நேரமானாலும் சரி, இயற்கை உபாதை ஏற்பட்டாலும் சரி. கையை கண்ணாடியில் இருந்து எடுக்க கூடாது. நான்கு மணி நேரத்துக்கு ஒருமுறை, 15 நிமிட ஓய்வு தரப்படும்.

ஓய்வுக்கு பின், மீண்டும், காரின் கண்ணாடியில் கையை வைத்தபடி, நின்று கொண்டே தான் இருக்க வேண்டும். இதில், 120 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். போட்டி தொடங்கிய முதல் சில மணி நேரங்களுக்கு போட்டியாளர்கள் உற்சாகமாகவே இருந்தனர். நேரம் செல்ல செல்ல, நெளியத் துவங்கினர். சிலருக்கு கால் வலித்தது, சிலருக்கு கைகள் வலித்தன. ஒவ்வொருவராக போட்டியில் இருந்து விலகினர். சிலர் மயங்கி விழுந்தனர். மயங்கி விழுந்த இளைஞர்களை, அவர்களின் தோழிகள், தோள் மீது தூக்கிச் சென்றனர்.

போட்டி துவங்கி, ஒரு நாள் கழிந்தபோது, மூன்று போட்டியாளர்கள் மட்டுமே இருந்தனர். இதில், ஒருவரின் கால்கள், பெரிதாக வீங்கி விட்டதால், போட்டியில் இருந்து வெளியேறினார். மற்றொருவரும், "ஆளை விட்டால் போதும்" என ஓடி விட்டார். போட்டி தொடங்கி, நான்கு நாட்கள் கழிந்த பின்னும், ஒரே ஒரு இளைஞர் மட்டும், கார் கண்ணாடியில் இருந்து கையை எடுக்காமல் தொடர்ந்து வைத்திருந்து சாதித்தார். மொத்தம், 87 மணி நேரம், இவர் கார் கண்ணாடியில் கையை வைத்திருந்ததால், வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டு, அவருக்கு, பி.எம்.டபிள்யூ. கார் பரிசளிக்கப்பட்டது.

அந்த இளைஞன் கூறுகையில், "ஆர்வக் கோளாறு காரணமாக, இந்த போட்டியில் பங்கேற்றேன். உயிருடன் விளையாடும் இதுபோன்ற அபாயம் மிகுந்த போட்டிகளில் இனி பங்கேற்க மாட்டேன்..." என்றார். உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும், இதுபோன்ற போட்டிகளை நடத்துவதை எதிர்த்து, மனித உரிமை அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன. இதில், மிகப் பெரிய சோகமான தகவலும் உண்டு. அவருக்கு கார் பரிசளிக்கப்பட்டாலும், இந்த காரை, அவர் ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இதன்பின், அந்த காரை, போட்டியை ஏற்பாடு செய்த நிறுவனத்திடமே திரும்ப ஒப்படைத்து விட வேண்டும்.

## "நாளைய தீர்ப்பு"



படம் மூலம் விஜய் கதாநாயகனாக அறிமுகமானாலும், இந்தப் படம் தோல்விப் படமாக அமைந்ததால், அடுத்த படம் என்ன என்ற குழப்பத்தில் இருந்தாராம் அவரின் தந்தை சந்திரசேகர்.

இதை கேள்விப்பட்ட விஜயகாந்த், சந்திரசேகரை அழைத்து "என்னையும் விஜயையும் வைத்து ஒரு படம் எடுங்க... நான் சிறப்புத் தோற்றத்தில் நடிக்கிறேன்" என்று சொல்ல, அப்படி எடுக்கப்பட்ட படம்தான் "செந்தூர பாண்டி".

இது தான் விஜயின் முதல் வெற்றிப் படம். விஜய் என்ற நடிகரை தமிழ்நாடு முழுவதும் அறியவைத்ததும் இந்தப் படம் தான்.



## Circuit 1996

காதல் கோட்டை படத்துக்குப் பின்னர் ஒரு திரைப்பட விநியோகஸ்தராகவும் அஜீத் புது அவதாரம் எடுத்தார். அதற்காக தொடங்கின கம்பனியின் பேர்தான் இது. ராசி, நேசம் ஆகிய இரண்டு படங்களை தயாரிப்பாளரிடமிருந்து வாங்கி விநியோகம் செய்தார். படங்கள் அட்டர் ஃப்ளாப். அதன்பிறகு தனது விநியோகக் கம்பனியை இழுத்து மூடிவிட்டார்.

சென்னை அண்ணாசாலையில் இருந்த இந்த கம்பனிக்கு அப்போது அடிக்கடி வருபவர்களில் ஒருவராக நடிகை ஹீரா இருந்தார் என்பது கூடுதல் தகவல்.

## ரஜினியின் "நான் மகான் அல்ல"



படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் "நான் காந்தி அல்ல". தணிக்கைக் குழுவினரின் கடும் எதிர்ப்புக்குப் பின் இந்தப் படத்தின் பெயர் "நான் காந்தி அல்ல"-வில் இருந்து "நான் மகான் அல்ல"-என்று மாறியது.

கே. பாலச்சந்தரின் கவிதாலயா தயாரித்த இந்தப் படத்திற்கான போஸ்டர்களிலும் இசைதட்டுக்களிலும் "நான் காந்தி அல்ல" வாசகமே இடம்பெற்றிருந்தது!

படத்தின் இடதுபுறத்தில் "kavithalayaa presents NA AN GANDHI ALLA" தெரிகிறதா!



# கணினி உலா

A.J.Nimalrajan

## முழு இணைய பக்கத்தையும் Screen Shot எடுப்பதற்கு


எந்தவொரு மென்பொருளும் நிறுவாமலேயே Screen Shot எடுக்கலாம் என்ற போதிலும், முழு தளத்தையும் நம்மால் ஸ்கிறீன் ஷொட் எடுக்க இயலாது.

Capturefullpage.com

இந்த தளத்தில் சென்று உங்களுக்கு ஸ்கிறீன் ஷொட் எடுக்க வேண்டிய பக்கத்தின் முகவரி மட்டும் கொடுத்தால் போதும், அது முழு பக்கத்தையும் எடுத்து தந்து விடும்.

FireShot - Webpage Screenshots - Firefox Add-On

Firefox Browser-ஐ பயன்படுத்துபவர்கள் இந்த Add-On ஐ நிறுவி ஸ்கிறீன் ஷொட் எடுக்கலாம். அதை பேஸ்புக்கில் பகிரலாம், உங்கள் கணனியில் சேமிக்கலாம், பிரிண்ட் செய்யலாம். இதிலேயே இமேஜ் எடிட் செய்யும் வசதியும் உள்ளது.



FireShot

Screen Capture – Chrome Add-On

கூகுள் குரோம் பயன் படுத்துபவர்கள் இந்த Add-On I நிறுவி ஸ்கிறீன் ஷாட் எடுக்கலாம். இதில் ஸ்கிறீன் ஷொட் எடுக்க பலவித வசதிகளும் உள்ளன. குறிப்பிட்ட பகுதி, முழு பக்கம், முழு ஸ்கிறீன் என இதிலேயும் இமேஜ் எடிட் செய்யும் வசதியும் உள்ளது.

Screen Capture

DuckLink

ஸ்கிறீன் ஷொட் எடுக்க பயன்படும் மிக அருமையான மென்பொருள் என்றால் அது இது தான். இதை நிறுவி விட்டு, தேவையான பக்கத்தை ஓபன் செய்து வைத்துக் கொண்டு ஸ்கிறீன் ஷொட் எடுக்க கிளிக் செய்தால் போதும், அதன் பின்னர் இதிலேயே எடிட் செய்தும் கொள்ளலாம்.

## கணனி அடிக்கடி Restart ஆனால்?


உங்களது கணணி அடிக்கடி Restart ஆவதற்கும், Hang ஆவதற்கும் பல காரணங்கள் உள்ளன. அதில் மிக முக்கியமாக நான்கு காரணங்கள் உள்ளன.

1. புதிதாக ஏதேனும் ஒரு வன்பொருளை உங்கள் கணணியில் நிறுவி இருந்தால் அது நன்றாக பொருத்தப்பட்டு உள்ளதா என்று பரிசோதிக்கவும். அதன் பின் அந்த வன்பொருளின் Settings Check பண்ணவும்.

2. RAM Slot-ல் இருந்து RAM-ஐ எடுத்து அதன் காப்பர் பாகத்தை மென்மையாக துடைக்கவும். அதை துடைக்க Pencil Eraser பயன்படுத்துவது சிறந்தது. இதனை பின்பு Mother Board-ல் இணைக்கும் போது கவனமாக இணைக்க வேண்டும்.


3. Mother Board-ல் Processor Heat Sink உடன் இணைந்திருக்கும் Cooling Fan இயங்குகிறதா என்று சரிபார்க்கவும்.

மேலும் அது Heat Sink உடன் ஒட்டி இருக்கும்படி அமைந்துள்ளதா என்று சரி பார்க்கவும்.




4. கடைசியாக SMPS(Switch Mode Power Supply) Fan செயலபடுகிறதா என்று பார்க்கவும்.

## உங்கள் மவுஸ் இயங்க மறுக்கிறதா?



உங்கள் மவுஸ் திடீரென இயங்க மறுக்கலாம், அல்லது பட்டன்கள் கிளிக் செய்தாலும் எந்தவித செயலும் இன்றி சும்மா இருக்கலாம். இதனால் நாம் மவுஸை எடுத்து மீண்டும் கம்ப்யூட்டரில் இணைத்துப் பார்ப்போம். புதிய யு.எஸ்.பி. போர்ட்டில் இணைத்து வேலை செய்கிறதா எனச் சோதனை செய்திடுவோம். அல்லது கம்ப்யூட்டரை ரீஸ்டார்ட் செய்திடுவோம்.

அப்படியும் மவுஸ் எனக்கென்ன என்று இருந்தால் நம் பொறுமை எல்லை மீறிப்போய் மவுஸை தூக்கி எறியும் அளவிற்குச் சென்று விடும். ஆனால் கம்ப்யூட்டரை இயக்க வேண்டுமே. என்னதான் தீர்வு? இதோ விண்டோஸ் அதற்கான வழிகளைத் தந்துள்ளது. உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள NumLock முதலியன உங்களுக்கு மவுஸாக துணை புரியும் வகையில் செட் செய்திடலாம்.

முதலில் Alt+Shift+NumLock அழுத்துங்கள். ஒரு சிறிய மவுஸ் கீ விண்டோ கிடைக்கும். மவுஸ் கீகளை இயக்க நிலையில் வைக்க விரும்பினால் ஓகே கிளிக் செய்திடுங்கள்.

மவுஸ் கேர்சர் குறித்த தகவல்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றால் ளுநவவவைபெள பட்டனில் கிளிக் செய்திடுங்கள். மவுஸ் கேர்சர் ஸ்பீட் மற்றும் பலவற்றை இதில் செட் செய்திடலாம். செட் செய்து முடித்தவுடன் கீழ்க்காணும் வகையில் உங்கள் ரேஅடுழஉம முநலியன மவுஸாகச் செயல்படும் அல்லது நீங்கள் செயல்படுத்தலாம்.

* 1,2,3,4,6,7,8,9 ஆகிய கீகள் மவுஸ் கேர்சர் செல்லும் திசையை நிர்ணயிக்கும்.
* 5 ஆம் எண்ணுக்கான கீ மவுஸ் கிளிக் பட்டனாகச் செயல்படும்.
* இன்ஸெர்ட் கீ மவுஸ் கிளிக் பட்டனாக இயங்கும்.
* + கீ ஏதேனும் ஒரு ஒப்ஜெக்ட் மீது கேர்சரை வைத்து டபுள் கிளிக் செய்திட பயன்படும்.
* டெலீட் பட்டன் மவுஸை ரிலீஸ் செய்திட பயன்படும். நம்பர் கீ பேட் மவுஸ"க்குப் பதிலாக இயங்குவதை நிறுத்த ரேஅடுழஉம பட்டனைத் தட்டவும்.

## கூகுள் தேடலில் பார்த்த பக்கங்கள் மீண்டும் வருவதை தவிர்க்க

இணையத்தில் கொட்டி கிடக்கும் தகவல்களை நொடிப் பொழுதில் நமக்கு வழங்கும் தேடியந்திரங்களில் கூகுளின் சேவை சிறப்பானதே. கூகுளில் ஏதேனும் தீவிரமாக தேடிக் கொண்டிருக்கும் பொழுது நாம் ஏற்கனவே பார்த்த பக்கங்களும் சேர்ந்தே வரும். இதனால் ஒரே பக்கத்தை திரும்ப திரும்ப பார்க்க வேண்டிய சூழல் உண்டாவதுடன் நமக்கு தேவையான தீர்வை கண்டறிய அதிக நேரம் செலவழிக்க வேண்டிதயாகி உள்ளது. இந்த பிரச்சினைகளை தவிர்க்க ஏறகனவே பார்த்த பக்கங்களை மறுபடியும் கூகுள் தேடலில் காட்டாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று கீழே பார்ப்போம்.

Google
Search Tricks

இதற்கு கூகுளில் ஒரு வசதி உள்ளது. கூகுள் தேடியந்திரத்தில் தேடி கொண்டிருக்கும் பொழுது அதே பக்கங்களை மறுபடியும் வருவதை தவிர்க்க கூகுள் பக்கத்தில் Show Search Tools என்பதை கிளிக் செய்யுங்கள்.

அதை கிளிக் செய்த உடன் சில தேடல் வசதிகள் வரும் அதில் Not Yet Visited என்பதை கிளிக் செய்தால் போதும் ஏற்கனவே பார்த்த பக்கங்களை நீக்கி புதிய தேடல் முடிவுகளை கூகுளில் காணலாம்.

## இணையத்தளங்களை தவறாக பயன்படுத்தும் சிறுவர்கள்



உலக அளவில் இணைய தளத்தின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடு இன்றி இப்போது அனைவரும் இணைய தளத்தைப் பயன்படுத்துகின்றனர். இது ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியே.

ஆனால் எந்த அளவிற்கு இணைய தளத்தின் பயன்பாடு அதிகரிக்கிறதோ அந்த அளவிற்கு இணைய தளத்தைத் தவறாக பயன்படுத்துவதும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக சிறுவர்கள் இணைய தளத்தை தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்ற அதிர்ச்சி செய்தியும் வருகிறது. அதிலும் குறிப்பாக 8 முதல் 17 வயதிற்குட்பட்ட 53 சதவீத சிறுவர்கள் இணைய தளத்தைத் தவறான நோக்கத்துடன் பயன்படுத்துகின்றனர் என்று ஒரு சமீபத்திய ஆய்வு கூறுகிறது.

25 நாடுகளைச் சேர்ந்த 8 முதல் 17 வயதிற்குட்பட 7600 குழந்தைகளிடம் மேற்கொள்ளப்பட்ட குளோபல் யூத் ஒன்லைன் பிகேவியர் சேர்வே என்ற இந்த ஆய்வில் இந்த பகீர் தகவல் வந்திருக்கிறது.

இணைய தளத்தில் சிறுவர்கள் ஒருவருக்கு ஒருவர் எவ்வாறு மரியாதை கொடுக்கின்றனர் மற்றும் இணைய தளத்தை தங்கள் குழந்தைகள் பயன்படுத்தும் போது அதைப் பெற்றோர்கள் எவ்வாறு கண்காணிக்கின் றனர் என்று ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இணைய தளத்தில் சிறுவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது அனைவருடைய கடமையாகும்.

## Skype உரையாடல்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டுமா??

நீங்கள் அனைவரும் skype பயன்படுத்துவீர்கள். அதில் பல நண்பர்களுடன் உரையாடுவீர்கள். வெளிநாடுகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் தங்கள் உறவினர்களுடன் கதைத்து மகிழவும் போகமுடியாத திருமண நிகழ்வுகள் வேறுபல நிகழ்வுகளை காணவும் பயன்படுத்துகின்றனர்.

அவர்களுக்கே இப்பதிவு . powergramo pro இவ் மென்பொருளை நிறுவியதும் skype ஐ on செய்யவும். செய்தபின்னர் skype இன் மேற்புறத்தே allow பண்ணுமாறு ஒரு கோரிக்கை வரும் அதனை allow பண்ணுங்கள். இனி உங்களது மென்பொருள் தயார் நிலைக்கு வந்துவிட்டது.




உங்களுக்கு vedio தேவையில்லை audio மட்டுமே போதுமானால், software இன் tools சென்று enable recording இல் தேவையான மாற்றங்களை செய்துகொள்ளுங்கள்.

இப்போது நீங்கள் skype ஐ பயன்படுத்தும்போது தானாகவே நீங்கள் செய்த settings இற்கு ஏற்ப ஒலிப்பதிவு/ஒளிப்பதிவு செய்ய தொடங்கும்.

இதில் பதிவு செய்யும் fileகள் அனைத்தும் இம்மென்பொருளினூடாகவே படிக்கமுடியும். ஆனால் தேவையான fileகளை தெரிவுசெய்து file சென்று export records as சென்று தேவையான format களில் (.mp3, .wma,.ogg,.wav,.avi) save செய்து கொள்ளலாம்

# சுகாதார சீர்கேடான நிலையில் கழிவு நீர் வாய்க்கால்


(சிகரம்)

யாழ்.பொது நூலகத்திற்கு முன்பாக காணப்படும் கழிவு வாய்க்காலுக்குள் கழிவுநீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதாக நூலகத்திற்கு செல்வோரும் மற்றும் அவ்வீதியால் செல்பவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நூலகத்திற்கு தினமும் அதிகளவான வாசகர்கள் வருகை தருவதுடன், நூலகத்திற்கு அண்மையிலேயே சாரதிப் பயிற்சி பெறுபவர்களுக்கான பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. .இந்த நிலையில் இவ்வாறு கழிவு நீர் தேங்கி நிற்பதால் தாம் அவ்வீதியால் சிரமத்தின் மத்தியில் செல்லவேண்டியிருப்பதாக இதனூடான பயணத்தை மேற்கொள்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருப்பினும் யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் தினமும் சுத்தம் செய்கின்றபோதும், நீர் முற்றாக வழிந்தோடுவதற்கான அமைப்பு இல்லாமையினாலேயே இவ்வாறு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.



# இலகு முறையில் சிங்களம் வழிகாட்டல் நூல் வெளியீடு




(பிரமில்-சிகரம்)

சிங்களமொழி ஆசிரியர் ஷேபாலி சுபசிங்ஹவின் 'இலகுமுறையில் சிங்களம்' என்ற வழிகாட்டல் நூல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலத்தின் பிரதான மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேற்படி வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராவும், வடமாகாண ஆளுநரின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் க.ப.பத்மலிங்கம், கரைச்சிப் பிரதேச விளையாட்டுத்துறை அதிகாரி ந.குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.சுந்தரலிங்கம் இந்த வழிகாட்டல். நூலை வெளியிட்டு வைக்க, இதன் முதற் பிரதியை கிளிநொச்சி புனித திரேசா மகளீர் கல்லூரி அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, நூலின் ஆய்வுரையை கிளிநொச்சி வலய ஆங்கிலப் பாடநெறி ஆலோசகர் வழங்கியதுடன், ஏற்புரையை நூலின் ஆசிரியர் ஷேபாலி சுபசிங்ஹ வழங்கினார்.

இந்த வழிகாட்டல் நூல் பாடசாலை மாணவர்களுக்கு 150 ரூபாவுக்கும், ஏனையோருக்கு 350 ரூபாவுக்கும் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

# மகாகும்பாபிஷேகம்

அராலி பட்டன்வளவு ஸ்ரீ வாணயம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 10.41மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இதில் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகப் பூசைகள் இடம்பெறவுள்ளன.

# ஆளுநருடன் சந்திப்பு


(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற தகவல்தொழில்நுட்ப ஆசிரியர்களை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் வைத்து வடமாகாண ஆளுநர் ஜ..ஏ. சந்திரசிறி சந்திக்கவுள்ளார்.

ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகை தரும் போது ஆவணங்களை தவறாது ஏடுத்துவருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சந்திப்புக்கு வடமாகாணத்திலுள்ள சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இச்சந்திப்பு முன்னர் நடைபெறவிருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக நாட்டில் குளங்கள், மற்றும் நீர்த் தேக்கங்கள் என்பன வற்றியுள்ளன. அந்தவகையில், வற்றிய நிலையில் காணப்படும் யாழ்ப் பாணத்தில் உள்ள குளம் ஒன்றின் தோற்றத்தைக்காணலாம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

தெருப் பக்கம் மல்லிகைக்
கொடியருகே புளிய
மர நிழலடியிற் கண்டேன்
நானுன்னைக்
காணாத
ஒன்றைப் போல.

**– ரா.ஸ்ரீனிவாசன்**

சற்றுமுன் அவள் நடந்து போன
தடயம் எதுவுமின்றி
அமைதியாகக் கிடக்கிறது வீதி
ஆனால்
அதிவேக ரயிலொன்று
கடந்துபோன தண்டவாளம்போல
ஏன் இன்னும் அதிர்கிறது
என் இதயம்?

**– தபூ சங்கர்**

இயல்பாய் இருக்க
இயலவில்லை
உன்
சந்திப்புக்குப் பிறகு.

**– மயூரா ரத்னசாமி**

நான் மறந்தேன் எனினும்
எனைத் தான் மறவான் எனது
நாயகன் என்றாடுகின்றேன்
எனினும் இதுவரையும்
ஊன் மறந்தேனுயிர் மறந்தேன்
உணர்ச்சியெலாம் மறந்தேன்
உலகமெலாம் மறந்தேனிங்
குன்னை மறந்தறியேன்.

**– திருவருட்பா**

குஞ்சு முகத்தழகும்
குறுகுறுத்த கண்ணழகும்
நெற்றியழகும்
நித்திரையில் காணுதடி!
பாகா உருகுறேனே...
பச்சைநெல்லாத் தீயுறேனே...
உமியா உதிருறேனே...
உன்னுடைய நினைவாலே!
வஞ்சிக் கொடியழகி
வைரமணித் தோளழகி
கொஞ்சுங் கிளியே
உன்னைக்
கொஞ்சுவது எக்காலம்?

**– நாட்டுப்பாடல்**

என்னைத் துரத்திவிட்டு
உன்னைப் பின்தொடரும்
என் மனம்!

**– ஜெ.பிரான்சிஸ் கிருபா**

அவர்கள் என்னைக்
கல்லால் அடிக்கவில்லை
அவள் அழகிற்கு ஏற்றவனாகச்
செதுக்குகிறார்கள். **– கஜல்**

சைக்கிளில் ஸ்கூலுக்கு வந்தாள்
சந்திரா என்றுதான்
சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டேன்.
இங்கிலீஷில் வெளுத்துக் கட்டுகிறாள்
இஸபெல்லா என்றுதான்
டியூஷன் வைத்து
இங்கிலீஷில் பாஸானேன்.
தேர்ந்தெடுத்த வார்த்தைகளால்
தமிழ்ச்செல்விக்கு
கடிதமெழுதித்தான் கவிஞனானேன்.
வேறு ஊரிலிருந்தவளுக்கு
என்னை நினைவூட்டவே
பத்திரிகைகளில் கதை எழுதினேன்.
காதலித்தவளை கைப்பிடித்தவன்
அமைச்சரின் செக்ரெட்டரி என்றுதான்
ஆவேச அரசியல் பத்திரிகையாளன்
ஆனேன்.
எவள் எவளாலோ
வளர்ந்த எழுத்தறிவுதான்
இப்போது எனக்குச் சோறு போடுகிறது.
அப்பன் பாரதி சொன்னது போல
'ஆதலினால் காதல் செய்வீர்'
அழிய மாட்டீர்!

**– வித்யாஷங்கர்**

அந்தக் கண்களில்
மாட்டிக் கொண்டேன்
மனசோடு
இப்போது நான்
இரண்டாம் மனிதன்
நான்
இருந்த வீடுதான்
பழகிய வீதிதான்
இப்போது
அரண்மனையாகவும்
ராஜ வீதியாகவும்
ரசவாதமாகியுள்ளது.
அந்த வானவில்
வருகிற நேரமெல்லாம்
எனக்குள்
சில மேகங்கள்
முட்டிக் கொள்கின்றன
இப்போது
நிமிஷத்தின் நீளம்
குறைந்துவிட்டதோ
என்று
யோசிக்கிறேன்.

**– ஜீவி**

அவளுக்குக் கர்டியைப்
போல மென்மையான
உடல் அவள் சிரித்தால்
கழுதைப்புலி போல
இருக்கிறது யானையைப்
போல அதிரடியாக
நடக்கிறாள் கழுத்து சற்றே
ஒட்டகச்சிவிங்கி மாதிரி
நான் அவளைக்
காதலிக்கிறேன் நம்புங்கள்!
சத்தியமாக,
உயிருக்குயிராய்க்
காதலிக்கிறேன்!

**– லூயி கெரோல்**

உன் விழியிலிருந்து
அத்தனைக் கதிர்களும்
அத்தனைப் பூவிரலாய்
என் நரம்புகளில்
எந்த ராகங்கள் தேடி
அலைகின்றன?
உன் விழிகளினமுதம்
என்னுள் ளிறங்கி
என்னைப் புதுப்பித்திருக்கும்
இவ்வேளையில்
நான் புரிந்து கொள்கிறேன்
இந்த வினாடிகளின்
ஏக்கத்துக்காகவே
இத்தனை வருஷங்களைத்
தாண்டி வந்தேன்!
இந்தப் புதிர்கள் முன் பிரமிக்கவே
இத்தனை அறிவிலும்
புகுந்து வந்தேன்!
இவற்றின் சாயல்களைச்
சித்தரிக்கவே
இத்தனைக் காலம்
இதயத்தை ஒரு தூரிகையாய்ச்
செய்து கொண்டிருந்தேன்!

**– அபி**

கண்ணில் சுருக்கு வைத்துக்
கனவு வலை விரித்துக்
காதல் பறவை வரக்
காத்துநின்ற மோகலயம்
தாலிகட்டி யொருத்திக்குச்
சம்மதிக்க நானிழந்தேன்.

**– தேனரசன்**

காலமுற்றும் தொழுதிடல் வேண்டும்
காதலென்பதோர் கோயிலின் கண்ணே

**– பாரதி**



சிறிலங்கா மிரர், லங்கா எக்ஸ் நியுஸ் இணையத்தளங்கள் நாடர்பான வழக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உள்ளிட்ட பலரும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் ஒன்பது பேரும் மன்றில் ஆஜராகி வெளியேறினர்.

# முழு நாட்டையுமே அரசாங்கம் போராட்ட வலயமாக மாற்றியுள்ளது

(கொழும்பு)

அரசாங்கம் முழு நாட்டையுமே போராட்ட வலயமாக மாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட எடுத்த தீர்மானத்திற்கு அரசாங்கமே பொறுப்பு. மின்சாரசபையின் நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணி நீக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் ஊழியர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது.

தொழிற்சங்கப் போராட்டங்களினால் நாட்டின் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மஹிந்த சிந்தனை கொள்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அடக்குமுறைக்கு உட்படுத்தக் கூடாது என்றார்.



# கைவிடப்பட்ட நிலையில் 15 நாள் குழந்தை



மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிர்தௌஸ் நகர் கடற்கரையோரத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் 15 நாட்கள் நிரம்பிய கைக்குழந்தையொன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.


காத்தான்குடி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றில் அநாதரவாக கைவிடப்பட்டு அழுது கொண்டிருந்த குழந்தையொன்றை அந்த முச்சக்கர வண்டியின் சாரதியும் கடற்கரையிலிருந்த பொது மக்கள் சிலரும் கண்டெடுத்துள்ளனர். காத்தான்குடி நகர சபை தலைவருக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளனர்.

பின்னர் காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.அஸ்... காத்தான்குடி பொலிசாருக்கு இந்த தகவலை வழங்கியதுடன் குழந்தையை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் குழந்தையை பரிசோதனை செய்தபின்னர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு பிரிவில் அக்குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒன்றுபட முஸ்லிம் கட்சிகள் இணக்கம்



(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை தேர்தலில் மூன்று முஸ்லிம் கட்சிகளும் ஒன்று பட்டு செயற்பட இணக்கம் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் கவுன்சிலின் ஏற்பாட்டில் நடை பெற்ற கூட்டததிலேயே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் கவுன்லின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் கொழும்பு தாறுல் ஈமான் கட்டிடத்தில் முஸ்லிம் கட்சிகளை ஒன்றினைக்கும் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டம் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க றிஸ்வி முப்தி, அதன் செயலாளர் முபாறக் மதனி பொருளாளர் கலீல் மௌலவி கொழும்பு மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவின் தலைவர் அஸிஸ் மிஸ்பாஹி ஆகிய உல்மாக்கள் முன்னிலையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தவிசாளரும் பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத், மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஸ்லம், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் அதன் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக், செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீட், சட்டத்தரணி சஹீட் உட்பட சிறிலங்கா முஸ்லிம் கவுன்சிலின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது இக் கூட்டத்தில் எதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை கருத்திற் கொண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய மூன்று முஸ்லிம் கட்சிகளும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஒன்று பட்டு செயற்படுவதுடன் சமூகத்தின் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை கருத்திற்கொண்டு செயற்படுவதெனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை தேர்தல் காலமும் புனித றம்ழான் நோன்பு காலமும் ஒன்றாக வருவதனால் யாரையும் யாரும் விமர்சிக்காமல் நடந்து கொள்வது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் றஊப் ஹக்கீம் மற்றும் தேசிய காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அதாவுல்லா ஆகியோர் கலந்து கொள்ளாவிடினும் இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அடுத்த கூட்டம் செவ்வாய்க்கிழமை யன்று நடாத்துவது எனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனையில் ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேத்தாழை பிரதேசத்தில் ஒரு தொகை ஆயுதங்கள் வெலிக்கந்தை சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

பேத்தாழை, விநாயகபுரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் அற்ற பகுதியிலேயே குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஆயுதங்கள் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.


ரி56 ரக துப்பாக்கி-1, கைக்குண்டு -1, மிதிவெடி உள்ளிட்ட பொருள்களே புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# இராணுவத்தினரின் வசமிருந்த 180 ஏக்கர் காணிகள் மக்களிடம் கையளிப்பு

யுத்தம் இடம்பெற்றபோது வவுனியாவில் தற்காலிகமாக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்த பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் மீண்டும் அவர்களிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அங்கு வீடமைப்பு பணிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்த சுமார் 180 ஏக்கர் காணி தற்போது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. தாண்டிக்குளம், ஓமந்தை உள்ளிட்ட சில பகுதிகளில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளில் தற்போது வீடுகள் அமைக்கப்பட்டு வருவதுடன் சிறு கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.தமது சொந்தக் காணிகள் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என அந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.







பூநகரி சோபாலபிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வில் அடியார் ஒருவர் மூலமூர்த்திக்கு எண்ணெய்க்காப்பு சாத்துவதையும், பிரதம குருவால் தூபிக்கு அபிஷேகம் நடத்தப்படுவதையும் பூரண கும்பம் வீதி உலாவருவதையும் படங்களில் காணலாம். (112)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

அளவையியலும் விஞ்ஞான முறையும்

கல்வி முரசு

ஆசிரியர் M.W.காண்டீபன்

(பகுதி I தொடர்ச்சி....)

## விஞ்ஞான வகைகள்

சமூக விஞ்ஞானம்

| | |
|---|---|
| 1. வரலாறு | 2. பொருளியல் |
| 3. அரசறிவியல் | 4. சமூகவியல் |
| 4. உளவியல் | 6. குடித்தொகை பரம்பல் |

அனுபவமில் விஞ்ஞானம்

| | |
|---|---|
| 1. அளவையியல் | 2. உய்த்தறிவு அளவையியல் |
| 3. கணிதம் | 4. தூய கணிதம் |
| 5. கேத்திர கணிதம் | |

பிரயோக விஞ்ஞானம்

| | |
|---|---|
| 1. உள நோய் மருத்துவம் | 2. கணினி விஞ்ஞானம் |
| 3. தகவல் தொழினுட்பவியல் | 4. பல் வைத்திய நுணுக்கம் |
| 5. எந்திரவியல் | 6. தச்சு தொழில் |
| 7. விவசாயம் | 8. மிருக வளர்ப்பு |
| 9. மேசன் தொழில் | 10. கதிர்சிகிச்சை |

விஞ்ஞானம் மல்லாதவை

| | |
|---|---|
| 1. சமயம் | 2. சோதிடம் |
| 3. மூடநம்பிக்கை | 4. முனிகளின் ஆட்டம் |
| 5. கைரேகை சாஸ்திரம் | |

## விஞ்ஞான முறை

**விஞ்ஞானத்தில் ஒரு கண்டுபிடிப்பு என்பது ஒரு பிரச்சினையே ஆகும். ஒரு கருதுகோள் ஒன்று ஏற்றுக்கொள்வதும் அது முடிவடைகின்றது.**

1. மேலே உள்ள கூற்றில் பிரச்சினை என் கையில் கருதப்படுவது என்ன விஞ்ஞான வரலாற்றிலிருந்து பெற்ற இரண்டு உதாரணங்களின் உதவியுடன் விளக்குக?

2. மேலே உள்ள கூற்றில் கருதுகோள் என்கையில் என்ன கருதப்படுகின்றது பெற்ற இரண்டு உதாரணத்துடன் விளக்குக?

1. விஞ்ஞான முறைக்கும் உத்திக்கும் இடையே எவ்வாறு வேறுபாடு காண்பீர்?
2. உள்ளடக்க விதி காட்டுரு என்றால் என்ன? சரித்திரத்தில் அதனை உபயோகிக்க முடியுமா?
3. கருதுகோளை கட்டமைப்பதும் அதனைப் பரிசோதிப்பதுமே விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படையாகும். ஆராய்க?
4. எல்லா விஞ்ஞானங்களும் தொகுத்தறிதலை அடிப்படையாக கொண்டவை எனலாம்?
5. தொகுத்தறி உய்த்தறி முறைகள் ஒன்றிற் கொன்று எதிரானவையல்ல ஆராய்க?
6. உய்த்தறி வாய்ப்பு பார்த்தல் வாதமும் பொய்ப்பித்தல் வாதமும் தொகுத்தறி வாதத்தில் இருந்து முற்றிலும் சுதந்திரமானது அல்ல விளக்குக.

### பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாடு

- ஒரு கொள்கையை பொய்யாக்குதல் என்பதன் தாற்பரியம் யாது?
- ஒரு கொள்கையை பொய்யாக்கலுக்குரிய அளவுகோல் யாது?
- ஒரு கொள்கை பொய்பிக்கப்படுவதன் மூலம் நிகழ்வது யாது?
- ஒரு கொள்கையின் அனுபவ உள்ளடக்கம் என்பதன் தாற்பரியம் யாது?
- காள் பொப்பரின் பொய்ப்பித்தல் முறையினைச் சுருக்கமாகக் கூறி உண்மைபோல் தோன்றும் அதன் தன்மையை ஆராய்க?

### விஞ்ஞான சோதனை முறைகள்

1. விஞ்ஞான ஆய்வில் அவதானம் ஆற்றும் பங்கை உதாரணத்துடன் தருக?
2. "ஒவ்வொரு அவதானமும் அல்லது பரிசோதனையும் ஏதேனும் ஒரு கருதுகோளை பரிசீலிக்கின்றது" இக்கூற்றின் பொருள் யாது என்பதை விளக்குக?
3. கருதுகோளுக்கு ஆதரவாக இருந்தாலும் எதிராக இருந்தாலும் எல்லா அவதானங்களும் அவதானங்களே?
4. பொதுவில் பரிசோதனை அவதானத்திலும் அதிக நம்பிக்கையான சோதனை ஆவது ஏன் என உமது விடையை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக?
5. அவதானத்தில் ஏற்படும் போலிகளை உதாரணத்துடன் விளக்குக?
6. எவ்வளவு தூரம் விஞ்ஞானம் புலக்காட்சியினை ஆதாரமாகக் கொண்டுள்ளது எனக் கூறுக?
7. விஞ்ஞான முறையில் அனுபவ சோதனைகளில் முக்கியத்துவம் யாது?
8. "அறுதிச் சோதனை மூலம் பெறப்பட்ட முடிவு காலப் போக்கில் மாற்றமடைதல் கூடும்" அறுதிச் சோதனை என்றால் என்ன என விளக்கி மேற்படி கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் விஞ்ஞானத்தின் வரலாற்றிலிருந்து ஓர் உதாரணம் தருக?
9. தீர்ப்புச் சோதனைகளின் போது வெற்றிகரமான முடிவைப் பெறுவதற்காக விசேட விஞ்ஞானக் கருவிகள் பயன்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை விஞ்ஞான வரலாற்றிலிருந்து காட்டுக?
10. அவதானம் பரிசோதனைக்கு இடையிலான வேறுபாட்டைத் தருக?

### கருதுகோள்

1. நல்ல விஞ்ஞானக் கருதுகோளின் இலட்சணங்கள் யாவை?
2. விஞ்ஞானத்தில் நேர்வுகளுக்கு கருதுகோளும் என்பதை வேறுபடுத்துக?
3. பிரபஞ்ச பொதுமையாக்கல் புள்ளிவிபர பொதுமையாக்கல் என்ற இரண்டிற்குமிடையிலான வேறுபாட்டினை உதாரணங்களுடன் விளக்குக?
4. விதிகளையும் கோட்பாடுகளையும் வேறுபடுத்துக?
5. விஞ்ஞானத்தில் விதிகள் வேறு கொள்கைகள் வேறு என்பதற்கு எந்த நியாயமும் இல்லை ஆராய்க?
6. விஞ்ஞானக் கருதுகோள்களுக்கும் விஞ்ஞானக் கருவிகளுக்கும் இடையில் என்ன தொடர்பைக் காட்டமுடியும்.

### அளத்தல்

1. விஞ்ஞானச் சோதனைகள் மேலும் பயனுள்ளவையாக அமைவதற்கு அளவீடுகள் உதவுவது எவ்வாறு?
2. அளவறிதலே விஞ்ஞான முறையின் பண்பாகும் ஆராய்க?
3. நிறை (பாரம்) அளவுகளை சேர்த்துக் கூறக்கூடியதாக இருக்கும்போது புத்தியின் அளவு மட்டத்தை அர்த்தமுள்ள விதத்தில் சேர்க்க முடியாதிருப்பதேன்?
4. விஞ்ஞான முன்னேற்றமும் கருவிகளின் முன்னேற்றமும் ஒன்றில் ஒன்று தொடர்புடையது இக்கூற்றினை ஆராய்க?
5. சோதனையின் போது விஞ்ஞானியானவன் சோதனை பற்றிய மிகச் சரியான ஆவணங்களைப் பேணிவரல் வேண்டும் என்பது ஏன் முக்கியமாகின்றது?
6. மீள அளவிடலின் பங்கினைத் தருக?

### நிகழ்தகவு

அ)

1. தற்கால விஞ்ஞானத்தில் நிகழ்தகவின் முக்கியத்துவம் யாது என்பதைக் கூறுக?
2. நிகழ்தகவின் பாரம்பரிய மீடிறன் விளக்கங்களை உதாரணங்கள் தந்து விளக்குக?
3. நிகழ்தகவு பற்றிய கெயின்சின் கருத்தைக் கூறுக?

ஆ) ஒரு பாத்திரத்தில் 7 சிவப்பு நிறப்பந்துகளும் 5 நீல நிறப்பந்துகளும் உண்டு. இப்பாத்திரத்திலிருந்து தொடர்ச்சியாக இரு தடவைகள் பந்துகளை மாற்றாது (பிரதிவைப்புடன்) எடுக்கப்படுகின்றது. பின்வருவனவற்றுக்கான நிகழ்தகவை காண்க.

1. இரண்டு தடவையும் நீலப்பந்து வருவதற்கு
2. இரண்டு தடவையும் சிவப்பு பந்து வருவதற்கு
3. சிவப்பைத் தொடர்ந்து நீலம் வருவதற்கு
4. நீலமும் சிவப்பும் வருவதற்கு
5. இரண்டு தடவையும் நீலப்பந்து வராமலிருப்பதற்கு

## புள்ளி விபரவியல்

அ) 1. உய்த்தறி அனுமானப்புள்ளி விபரவியல் தொகுத்தறி அனுமானப் புள்ளி விபரவியல் உதாரணத்துடன் விளக்குக.

2. சமூக விஞ்ஞானங்களின் புள்ளி விபரவியலின் தொழிற்பாடுகளைத் தெளிவாகக் கூறுக

3. புள்ளிவிபரவியல் பொய் சொல்லுமா அது உண்மையா? (புள்ளி விபரவியல் ஏற்படும் தவறுகள் போலிகள்)

4. படுகை மாதிரி கூற்று என்றால் என்ன? (அடுக்கமைவு மாதிரி / படை முறைமாதிரி)

## விடை

ஒரு முழுமைத் தொகுதி பலதரப்பட்ட உறுப்புக்களைப் பெற்றிருந்தால் அந்த உறுப்புக்களின் பண்புகளுக்குத் தக்கவாறு படுகைகள் அமைந்து ஒவ்வொரு படுகையில் இருந்து எழுமாற்றாக மாதிரித் தெரிவின் மூலம் உறுப்புக்களை முழுமையாத் தொகுதியில் உள்ள படுகைகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுத்து அமைக்கப்படும் கூறுபடுகை மாதிரிக் கூற்று எனப்படும்.

உ+ம :- ஒரு கல்லூரியில் உள்ள மாணவர்களின் தேகநிலை குறித்து ஆராய்ச்சி செய்யும்போது மாணவர்களைக் கீழ்க்காணும் படுகைக்கு தக்கவாறு பிரித்தல்.

- வீட்டில் அல்லது மற்ற இடங்களின் வகிப்பவர்.
- தன்னைத்தானே ஆதரித்து கொள்ளும் நிலை அல்லது பிறர்த்தயவில் வாழுதல்.
- உடற் பயிற்சி செய்தல் அல்லது செய்யாமைக்கு உகந்தது.
- மதுபானம் அருந்துதல் அல்லது அருந்தாமை.

5. பெருக்கலிடை, இசையிடை, முகடு, பச்சைத்தரவு, புள்ளிவிபரவியல் இணைப்பு காலணைவிலகல் தராதரவில் போன்றவற்றுக்கு குறிப்புத் தருக?

6.

அ) 2, 4, 8 என்ற தரவு கூட்டத்தின் பெருக்கல் இடையைக் காண்க?

ஆ) 4, 6, 8, 10, 12 என்றதரவு கூட்டத்தின் இசையிடை காண்க?

இ) 5, 10, 15, 20, 25, 30, 35, 40, 45, 50, 55 என்ற எண்தரவு கூட்டத்தில் இருந்து

1. 1 ஆம் காலணை
2. 2 ஆம் காலணை
3. 3 ஆம் காலணை
4. காலணை விலகல் போன்றவற்கை காண்க.

ஈ) 12, 14, 16, 18, 20 என்ற தரவுத் தொகுதியின் நியமவிலகலைத் தருக?

உ) அ) நிறையளிக்கப்பட்ட கூட்டல் இடை என்றால் எனக்கூறுக.

ஆ) கணக்கு

கடந்த இரு மாதங்களில் சீனி, பட்டர், அரிசி, தேங்காய் ஆகியவற்றின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருட்கள் | 1ம் மாதத்திற்கான விலைகள் | 2ம் மாதத்திற்கான' விலைகள் |
|---|---|---|
| 1. சீனி | 20 | 30 |
| 2. பட்டர் | 15 | 10 |
| 3. அரிசி | 40 | 50 |
| 4. தேங்காய் | 15 | 20 |

சீனி, பட்டர், அரிசி, தேங்காய் போன்றவற்றுக்கான அளவிடு முறையே 5, 2, 3, 1 எனத் தரப்பட்டால் முதலாம் மாதத்திற்கானதும் இரண்டாம் மாதத்திற்கான சராசரி செலவினைக் காண்க?

## பொதுவான விடயங்கள்

7. 1. விஞ்ஞான கோட்பாடுகளை வளர்ப்பதில் காட்டுருக்களினதும் ஒப்புமையினதும் பங்கினை கூறுக.

2. ஒப்புமை அனுமானத்தில் ஏற்படக் கூடிய போலிகளைத் தருக.

3. J.S. மில்லியன் முறைகள் அல்லது விதிகளை உதாரணத்துடன் விளக்குக.

4. வைத்திய ஒழுக்கவியலின் பிரச்சினைகளைக் கூறுக?

5. சுயாதீன சித்தமும், நிர்ணயவாதம் பற்றிக் குறிப்புத்தருக?

6. C.L ஸ்ரீவன்சனின் ஒழுக்கவியற் கொள்கை பற்றிக் குறிப்புத் தருக?

## சமூக விஞ்ஞானம்

**அ) பின்வருவனவற்றை விளக்குக**

1. ஏடுகளின் ஆய்வு
2. அகழ்வு ஆயவு முறை
3. சமூக விஞ்ஞானங்களின் கட்டுப்பாட்டு குழு முறையின் பயன்பாடு
4. அகநோக்கு முறை
5. கள ஆய்வு முறை
6. சமூக விஞ்ஞானமும் எதிர் கூறலும்

## பொதுவான வினாக்கள்

ஆ)

1. சமூக விஞ்ஞானங்கள் பிரச்சினைகள் மத்தியிலும் இன்று விஞ்ஞான அம்சங்களைப் பெற்று முன்னேறியுள்ளன இக்கூற்றை விளக்குக.
2. சமூக விஞ்ஞானங்களில் பொருளியல் அதிக விஞ்ஞானத்தன்மை வாய்ந்ததா எனக் கூறுக?
3. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் பரிசோதனை நடாத்துவதிலுள்ள சிரமங்களை பரிசீலிக்குக?
4. சமூக விஞ்ஞான விளக்கமுறைகளை உதாரணத்துடன் விளக்குக?
5. ஒரேகளத்தில் பல கோட்பாடுகள் இருப்பதே சமூக விஞ்ஞானத்தின் பலவீனமாகும் இக்கூற்றை ஆராய்க?
6. சமூக விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படுவது அவதான முறையாக இருந்தாலும் அவை அளவீட்டுத் தன்மை வாய்ந்தவையாகும் தெளிவுபடுத்துக?
7. சமூக விஞ்ஞானங்களில் புறவயத்தன்மை பற்றிய பிரச்சினையை ஆராய்க?
8. தனி நிகழ்வு ஆய்வினை விளக்கி சமூக விஞ்ஞானங்களில் இது எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை விபரிக்குக?
9. கல்வி ஒரு பிரயோக சமூக விஞ்ஞானமாகும் இக்கூற்றை விளக்குக?
10. உளவியல் என்பது இயற்கை விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானமுமாகும் இக் கூற்றை விளக்குக?

## பகுதி III

**(விஞ்ஞானிகளும் முறையியலாளர்களும்)**

**கலிலியோ (1564 - 1642)**


இவர் இத்தாலி தேசத்தைச் சேர்ந்த வானியல், பௌதீகவியல், கணித அறிஞர், அத்துடன் விஞ்ஞான முறையியலாளரும் ஆவார்.

- நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.
- ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பொருட்கள் நிலத்தை நோக்கி விழும் வேகம் அவற்றின் நிறைக்கேற்ற விகிதத்தில் அமையும் என அரிஸ்டோட்டின் முன்வைத்தார். ஆனால் கலிலியோ இதற்கு கோபுர உச்சியிலிருந்து சமமற்ற நிறையுடைய இரு இரும்புக் குண்டுகளை சம நேரத்தில் விழ விட்டபோது அவை இரண்டும் சம நேரத்தில் பூமியை வந்தடையக் கண்டார். இப்பரிசோதனையின் மூலம் பொருட்கள் நிலத்தை நோக்கி விழும் வேகத்திற்கும் அவற்றின் நிறைக்கும் எவ்வித தொடர்புமில்லை என நிறுவினார். இதன் மூலம் அரிஸ்டோட்டிலின் கொள்கையை வலுவிழக்கச் செய்தார். இதிலிருந்தே கலிலியோவின் விதி உருவாக்கப்பட்டது.
- ஊசல் தத்துவத்தைக் கண்டறிந்தார். இதன் மூலம் நட்சத்திரங்களின் அசைவினை அளவிடவும் கடிகார நேரச் நேலச் செயற்பாட்டிற்கும் உதவ முடியும் எனக் கூறினார்.
- விண்வெளி ஆய்விற்கு உதவக்கூடிய தொலைக்காட்டியை கண்டு பிடித்தார். இதன் மூலம்
- தொலமியின் புவிமைக் கொள்கையை பொய்ப்பித்தார்.
- கொப்பனிகஸ்சின் சூரியமையக் கொள்கையை உண்மைப்படுத்தினார்.
- சந்திரனில் உள்ள மலைகள் குழிகள் ஆகியன பற்றியும் கண்டறிந்தார்.
- வியாழனில் உள்ள நான்கு உப கோள்களை அவதானித்தார்.
- சூரியனின் உள்ள கரும் புள்ளிகளை அவதானித்தார்.
- பால் வெளி மண்டலத்திலுள்ள உடுத்தொகுதிகளை அவதானித்தார்.
- வெள்ளிக்கிரகம் விரிந்து சுருங்குவதையும் சூரியனைச் சுற்றி சுழல்வதையும் காணமுடியும் என நிரூபித்தார்.
- செவ்வாய் கிரகத்தில் பருமன் மாற்றம் ஏற்படுவதை அவதானித்தார்.

(தொடரும்...)

# தென்னாபிரிக்காவிடமிருந்து இந்தியாவிற்கு

## மகாத்மாகாந்தியின் ஆவணங்கள்



(புதுடில்லி)

தென் ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி வாழ்ந்த போது எழுதிய அரிய கடிதங்கள், அவருடைய ஆவணங்கள், புகைப்படங்களை விலைக்கு வாங்க ஏல நிறுவனத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதனால் அடுத்த வாரம் நடக்க இருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டது. தென் ஆபிரிக்காவில் கடந்த 1904 ஆம் ஆண்டில் காந்தி பணி செய்த போது, அவருடைய நெருங்கிய நண்பராக ஹெர்மான் கலன்பேக் இருந்தார்.

அப்போது காந்தி நிறைய கடிதங்கள் எழுதியுள்ளார். ஆயிரத்துக்கும் அதிகமான இந்த அரிய கடிதங்கள், ஆவணங்கள், புகைப்படங்களை சர்வதேச ஏல நிறுவனமான சோத்பி வரும் 10 ஆம் திக்தி ஏலம் விடுவதாக அறிவித்திருந்தது.

இதையடுத்து, ஏல நிறுவனத்துடன் இந்திய கலாசாரத் துறை அமைச்சு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். காந்தியின் அரிய கடிதங்கள், படங்களை விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அதிகாரிகள் கையெழுத்திட்டனர்.

இதனால் 10 ஆம் திகதி நடக்க இருந்த ஏல நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாக சோத்பி நிறுவனம் நேற்று அறிவித்தது. காந்தியின் அரிய கடிதங்கள் 5 லட்சம் பவுண்ட் முதல் 7 இலட்சம் பவுண்ட் வரை விலை போகும் என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால், இந்திய அரசு எவ்வளவு பணம் தரப் போகிறது என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இந்த அரிய கடிதங்களில் காந்தியின் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் அடங்கி உள்ளன. காந்தியின் முதல் மகன் ஹரிலால், ஹெர்மனுக்கும் காந்தியின் 2 ஆவது மகன் மணிலாலுக்கும் இருந்த நெருங்கிய நட்புறவு, 3 ஆவது மகன் ராம்தாஸ் மற்ற குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் பற்றிய விவரங்கள் இந்த கடிதங்களில் இடம்பெற்றுளளன.

இந்த கடிதங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். காந்தியின் அரிய கடிதங்கள் விலை மதிப்பற்றவை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

## நவீனமயமாகும் சோதனைச் சாவடிகள்

(புதுடில்லி)

தமிழக மாநிலத்தில் செயற்பட்டு வரும் அனைத்து சோதனைச் சாவடிகளையும் நவீனமயமாக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சோதனைச் சாவடிகள் நவீனமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைத்து செயற்படுத்தும் பணிகளுக்காக, அரசு ரூபா 33 கோடியே 36 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இதன்மூலம் .18 பெரிய



சோதனைச் சாவடிகள் மற்றும் 13 சிறிய சோதனைச் சாவடிகள் நவீனமயமாக்கப்படுகின்றன. அனைத்து வசதிகளுடன் கூடிய 8 சோதனை முனையங்கள் உருவாக்கப்பட உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடக முதல்வராக ஜெகதீஸ் ஷட்டருக்கு வாய்ப்பு




(சென்னை)

கர்நாடக தலைமை பொறுப்பை மாற்றுவதற்காக பாரதிய ஜனதா கட்சியின் உயர்தலைவர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம், கட்சி தலைவர் நிதின் கட்காரி தலைமையில் இன்று நடைபெறுகிறது.

கர்நாடக முதல்வர் சதானந்த கவுடாவை அகற்ற வேண்டும் என்று எடியூரப்பா ஆதரவாளர்கள் தொடர்ந்து போர்க்கொடி உயர்த்தி வந்தனர்.

இந்நிலையில், மாநில முதல்வராக ஜெகதீஷ் ஷட்டரை நியமிக்க கட்சி தலைமை திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இம்மாதம் 16 ஆம் திகதிக்குள் ஜெகதீஷ் ஷட்டர் முதல்வராக பதவியேற்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.




## அசாமில் வெள்ளம் 543 வனவிலங்குகள் பலி

(புதுடில்லி)

அசாம் மாநிலத்தில் நிகழ்ந்த வெள்ளத்தில் சுமார் 543 வனவிலங்குகள் பலியாயின. அசாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கிராமத்திற்குள் புகுந்த வெள்ள நீரால் ஏராளமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

அதேபோல் புகழ் பெற்ற காசிரங்கா தேசிய வனவிலங்கு சரணாலயமும் வெள்ள நீரால் பாதிக்கப்பட்டது. சரணாலயத் திற்குள் புகுந்த வெள்ள நீரால் 80 சதவீத பூங்கா பகுதி சேதமடைந்ததுடன் அங்கிருந்த நீர்யானை, காண்டா மிருகம், மான், காட்டு எருமை உட்பட பல்வறு விலங்குகள் என மொத்தம் 543 விலங்குகள் பலியாகியுள்ளன. இது குறித்து சரணாலய இயக்குநர் சஞ்சிப் போரா கூறுகையில், இறந்த வனவிலங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் எனவும், தினமும் இறந்த விலங்குளின் உடல்களை அப்புறப்படுத்தி வருவதாகவும், தண்ணீர் முழுவதும் வடிந்த பின்னர் முழு விபரம் தெரியவரும் எனவும் அவர் கூறினார்.



மேற்குவங்க மாநிலத்தில் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கொல்கத்தா நகரில் பேரணியாகச் சென்றனர்.




## யாரையும் கற்பழிக்கவில்லை

(புதுடில்லி)



காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் காந்தி தன் மீது சுமத்தப்பட்டுள்ள கற்பழிப்புக் குற்றச்சாட்டு உண்மையற்றது, விஷமத்தனமானது அதற்கு எந்த அடிப்படையும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

சமாஜ்வாடி கட்சியின் மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் முன்னாள் எம்.எல்.ஏ. கிஷோர் சம்ரிதே. இவர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி மீது செக்ஸ் புகார் கூறி உத்தரபிரதேச மாநிலத்தின் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இதைத்தொடர்ந்து, இந்த வழக்கில் ராகுல் காந்தியின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், தன் மீது மனுதாரர் கூறியுள்ள புகார் முற்றிலும் தவறானது மட்டுமின்றி விஷமத்தனமானது, தனது புகழைக் கெடுக்கும் உள்நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார் ராகுல்காந்தி.

இத்தகைய பொய்யான குற்றச்சாட்டை வேண்டுமென்றே திட்டமிட்டு தொடர்ந்து சுமத்தி வரும் சம்ரிதே மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தனது மனுவில் நீதிபதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 7 வயதுக் குழந்தைக்கு ரோபோ மூலம் அறுவைச் சிகிச்சை

(புதுடில்லி)

சென்னையில் பிரபல மருத்துவமனை ஒன்றில், தென் ஆபிரிக்காவை சேர்ந்த 7 வயது பெண் குழந்தைக்கு ரோபோ மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த 7 வயது சிறுமி அசூரா. சாலை விபத்தில் சிக்கிய அசூராவுக்கு சிறுநீர் வடிகுழாயில் காயம் ஏற்பட்டது.

இதனால் பிளாடரில் தேங்கும் சிறுநீர் கட்டுப்பாடு இல்லாமல் வெளியேறிக் கொண்டே இருந்தது. இதையடுத்து சிகிச்சைக்காக 2011 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார்.


மருத்துவ பரிசோதனையில் சிறுநீர் வடிகுழாய் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிறுநீரை சேமித்து வைக்கும் பிளாடரும் சுருங்கி விட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் டாக்டர்கள் குழுவினர், சிறுமியின் பிளாடரில் உள்ள தசை பகுதியையே குழாயாக (சிறுநீர் வடிகுழாய் போன்று) உருவாக்கி சிறுநீர் வெளியேறும்படி வழி ஏற்படுத்தினர்.

ஆனால் ஒரு வருடத்துக்கு பின்னர் சிறுமி அசூராவுக்கு சிறுநீர் வெளியேறுவதில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து கடந்த மாதம் அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்தார்.

குழந்தைகள் நல சிறுநீரக மருத்துவ நிபுணர் டாக்டர் ஸ்ரீபதி தலைமையிலான டாக்டர்கள் குழுவினர் பரிசோதனை செய்தனர். திறந்த நிலை அறுவை சிகிச்சை செய்தால் செயற்கை குழாய் மூலமே ஆயுள் முழுவதும் சிறுநீர் கழிகக வேண்டிய நிலை உருவாகும், என்பதால் ரோபாட்டிக் தொழில்நுட்ப உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுகுறித்து டாக்டர் ஸ்ரீபதி கூறும்போது, சிறுநீர் பிளாடரை திறக்காமலேயே ரோபாட்டிக் தொழில்நுப்ப உதவியுடன் பிளா



டரில் உள்ள தசையில் புதிய படுக்கையை உருவாக்கி அதன் மீது சிறுநீர் குழாயை பொருத்தி தையல்கள் போட்டோம்.

ரோபோ தொழில்நுட்ப உதவியுடன் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், பெரிய துவாரம் தவிர்க்கப்பட்டதுடன், நீண்ட நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

சிக்கலான அறுவை சிகிச்சைக்கு பின்னர் சிறுமி அசூரா தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி மற்ற குழந்தைகளை போன்று மகிழ்ச்சியுடன் உள்ளார். இந்த சிகிச்சைக்கு 2 இலட்சம் செலவானது என்றார்.

# சர்வதேச பொருளாதாரத்தின் நிலை மோசமடையும் அபாயம்



ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் சர்வதேச அளவிலான பொருளாதார நிலை மேலும் மோசமடையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டியன் லாகர்டே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் கிரேககம், போர்த்துக்கல், இத்தாலி உள்ளிட்ட நாடுகள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன.

இவற்றின் நிதி நெருக்கடிக்கு உரிய தீர்வு காணப்படுவதில் மந்த நிலை காணப்படுகிறது. கால வரையறையுடன் கூடிய தீர்வு விரைவாக காணப்பட வேண்டும். இல்லையெனில் சர்வதேச அளவில் இதன் தாக்கம் மேலும் விஸ்வரூபம் எடுக்கும் என்று கிறிஸ்டியன் லாகர்டே சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய நாடுகளில் ஒரு வார காலம் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், டோக்கியோவில் நடைபெற்ற பொருளாதார கருத்தரங்கில் பேசுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நாடுகளில் இப்போது நிலவும் பொருளாதார தேக்க நிலை மூன்று மாதங்களுக்கு முன்பிருந்ததை விட மிக மோசமாக உள்ளது.

இத்தகைய சூழலில் உறுதியான நடவடிக்கையை ஐரோப்பிய கூட்டமைப்பு எடுத்தாக வேண்டும். இல்லையெனில் நிலைமை இன்னும் மோசமடையும். பொருளாதார தேக்க நிலை காரணமாக ஏற்படும் பயங்கரமான விளைவுகளை தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகச் செய்திகள்

# சிரியா அரசாங்கத்தில் பிளவு



சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு மிகவும் நெருக்கமான இராணுவத் தளபதி மனாஃப் தலாஸ் என்பவர் சிரியாவிலிருந்து வெளியேறி விட்டதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இவர் சிரியாவிலிருந்து கிளம்பி பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் வந்ததாக பிரெஞ்சு வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் அரசாங்கத்தில் உள்ளவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதன் மூலம், ஜனாதிபதி அசாத் அரசாங்கத்தின் மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அரசுக்கு எதிரான போராட்டங்களை வன்முறையின் மூலம் அடக்கியது தொடர்பில், தலைமைத்துவத்துடன் பிளவுபட்டு ஜெனரல் தலாஸ் விலகிப் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவில் 35 இராணுவத் தளங்களை ஏவுகணை மூலம் நிர் மூலமாக்குவோம் – எச்சரிக்கிறது ஈரான்



எங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அடுத்த சில நிமிடங்களிலேயே ஈரானை சுற்றியிருக்கும் 35 அமெரிக்க இராணுவ தளங்கள் ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் நிர்மூலமாக்கப்படும் என்று ஈரான் விமானப்படை கமாண்டர் அமிர் அலி ஹாஜிஜதே எச்சரித்துள்ளார்.

ஈரான் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்:

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துகிற அடுத்த சில நிமிடங்களியே ஈரானைச் சுற்றி அமெரிக்கா அமைத்துள்ள 35 இராணுவ தளங்களையும் நிர்மூலமாக்கக் கூடிய வகையில் ஏவுகணை தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஈரானின் ஏவுகணைகள் இந்த தளங்களை சில நிமிடங்களில் சென்று தாக்கி அழித்து விடக் கூடியவை. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள எந்த ஒரு அமெரிக்க இராணுவ தளத்தையும் விட்டுவைக்க மாட்டோம்.

இதேபோல்தான் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்திருக்கும் இஸ்ரேலிய படைகளையும் இலக்கு வைத்து ஏவுகணை தாகுதல் நடத்தப்படும். இந்தப்பிராந்தியத்தில் அமெரிக்கா ராணுவ தளங்களை அமைத்திருப்பது எங்களுக்கு அச்சுறுத்தல் அல்ல.. இன்னும் சொல்லப் போனால் ஈரான் படைகள் தாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தையே அவைகள் ஏற்படுத்தியிருக்கின்றன என்றே கூறலாம் என்றார்.

# முன்னேறுகிறார் ஒபாமா



அமெரிக்க அதிபர் தேர்தலில் மக்கள் ஆதரவு குறித்த ஆய்வு முடிவுகளில் ஒபாமா முன்னேறிவருகிறார். அமெரிக்க அதிபர் தேர்தல் இந்த ஆண்டு நவம்பரில் நடக்கிறது. அதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னி களமிறங்கியுள்ளார்.

வேலையில்லா திண்டாட்டம், பொருளாதார மந்தநிலை உட்பட பல்வேறு பிரச்னைகளை சமாளிக்க ஒபாமா தவறி விட்டதாக ரோம்னி பிரசாரம் செய்து வருகிறார்.

ஆரம்பத்தில் அவரது பிரசாரத்துக்கு மக்கள் ஆதரவு கிடைத்தது. சமீபத்தில் வெளியான ஆய்வுகளில் ஒபாமாவை விட ரோம்னிக்கு சிறிய வித்தியாசத்தில் கூடுதல் ஆதரவு இருப்பதாக கூறப்பட்டது. இந்த நிலையில், ஜூன் 27 முதல் ஜூலை 3 வரை சி.என்.என், காலப் டெய்லி, நியூஸ்வீக், டெய்லி பீஸ்ட் என பல்வேறு மீடியாக்கள் சார்பில் நாடு முழுவதும் மாதிரி ஆய்வு நடந்தது. அதில் ஒபாமாவுக்கு 48 சதவீத மக்கள் ஆதரவு இருப் பது தெரிய வந்தது. ரோம்னி க்கு 45 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, அதிபர் தேர்தலில் ரோம்னியை விட ஒபாமா முன்னிலை பெற்றுள்ளார்.

# மலேசியா பாடசாலையில் இப்படியும்..



மலேசியாவில் 16 வயது பாடசாலை மாணவி ஒருவர் குழந்தையை பெற்றெடுத்து, அதை தனது சக மாணவியின் பையில் வைத்திருந்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மலேசியா பள்ளி ஒன்றில் 16 வயது மாணவி ஒருவர், பள்ளியிலேயே பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார். ஆனால் அக்குழந்தை பிறந்தவுடன் இறந்து விட்டது.

இதையடுத்து செய்வதறியாமல் தவித்த அந்த மாணவி, குழந்தையின் உடலை தனது சக மாணவி ஒருவரின் பையில் வைத்து அதை அவரிடமே கொடுத்து விட்டார்.

இதில் புத்தகம் தான் இருக்கிறது என்று நினைத்த மாணவி, அதை 17 மணி நேரம் வைத்துள்ளார்.

இதேவேளை பிரசவித்த மாணவிக்கு வயிற்று வலி ஏற்படவே அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அங்கு மருத்துவர்களிடம் நடந்ததையெல்லாம் தெரிவித்துள்ளார்.

# மனைவியுடன் தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி சர்கோசி

பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி தேர்தலின் போது முறைகேடாக நிதி திரட்டிய புகாரில் சிக்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசி, தமது மனைவி கர்லா புரூனியுடன் கனடாவில் தங்கியுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதியான சர்கோசி, கடந்த 2007ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். அப்போது ஐரோபபிய ஒன்றியத்தின் பெரும் பணககாரரான லிலியான் என்பவரிடம் முறைகேடாக தேர்தல் நிதி திரட்டியதாக புகார் கூறப்பட்டது.



அவர் பதவி வகித்த காலத்தில் இந்த புகார் எழுந்ததால், இதை மறுத்த சர்கோசி, தாம் ஜனாதிபதி என்பதால் தமக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றார். தாம் பதவிக்காலத்தில் இருக்கும் வரை வழக்கு விசாரணைக்கு தடையும் கோரியிருந்தார்.

இந்நிலையில் புதிய ஜனாதிபதி பதவி ஏற்ற நிலையில், பாரீஸில் உள்ள சர்கோசியின் வீட்டில் திடீர்சோதனை நடத்தப்பட்டது. ஆனால் சோதனையின் போது சர்கோசி அந்த வீட்டில் இல்லை. பொலிஸார் வருவதற்கு முன்பாகவே அவர் தலைமறைவாகி விட்டார்.

தற்போது சர்கோசி,மனைவியுடன் கனடாவில் உள்ள கனேடிய தொழிலதிபரான பால் டெஸ்மராஸ் வீட்டில் பாதுகாப்பான முறையில் தங்கியுள்ளார்.

மேலும், கனேடிய தொழிலதிபர் பால் டெஸ்மராஸால்தான் தாம் பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் வெல்ல முடிந்தது என்று ஏற்கெனவே பல முறை சர்கோசி தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய மொழிக்கு எதிராக உக்ரைனில் போராட்டம்



ரஷ்ய மொழிக்கு பிராந்திய மொழி அந்தஸ்து வழங்கும் புதிய சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைனில் பொதுமக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக ரஷ்ய மொழி விளங்குகிறது.

இந்நிலையில் புதிய சட்டங்களின்படி ரஷ்யமொழிக்கு பிராந்திய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரஷ்ய மொழி பேசப்படும் மாகாணங்களில் நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் முதலானவற்றில் ரஷ்ய மொழியை பயன்படுத்த முடியும். அதே வேளை உக்ரைனிய மொழி தொடர்ந்தும் அரசாங்க மொழியாக இருக்கும்.

இந்நிலையில் இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சுமார் 1000 பேர் போராட்டம் நடத்தினர், போராட்டத்தை கலைக்க பொலிஸார் நடத்திய தாக்குதலில் உலகப் புகழ்பெற்ற பிரபல குத்துச் சண்டை வீரர் விட்டாலி கிளிட்ஸ்கோ உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

மேலும் ஜனாதிபதி ரஷ்யாவுக்கு நெருக்கமாக செயற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

# மீன்பிடிப் படகுகளின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் முக்கிய கடற்றொழில் மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் மீன்பிடிப்படகுகளின் பதிவுகளை துரிதப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்தின அந்தந்த மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர்களை பணித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்திருந்த போதே அமைச்சர் இவ்வாறு பணித்திருப்பதாக யாழ். கடற்றொழில் நீதியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த நான்கு மாவட்டங்களிலும் கடற்றொழிலில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளின் பதிவு நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லாததினாலும் சில படகுகள் இரட்டைப் பதிவுக்கு உட்பட்டுள்ளதனாலும், இதுவரை பதிவு நடவடிக்கைகளுக்கு உட்படாது பெருமளவு படகுகள் இருப்பதன் காரணமாகவுமே அமைச்சர் இவ்வாறு பணித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. அத்துடன், கடற்தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கும் நடவடிக்கையினை இலகுபடுத்தவும் முடியும் எனவும் அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)

## வடமாகாண...


மாவட்டம் ஐந்தாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின்போது இந்த ஆண்டு பல சாதனைகள் முறியடிக்கப்பட்டதாகவும், சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு வீர, வீராங்கனைகளின் ஆட்டத்தின் திறன் பன்மடங்கு வளர்ச்சி அடைந்திருப்பதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டி நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிமனையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், வலய, கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வீர, வீராங்கனைகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(மாகாண மட்டச் சாதனைகள் 9ஆம் பக்கத்தில்...) (12)

# விம்பிள்டன் கிண்ணத்தை கைப்பற்றினார் செரீனா



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொட ரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றினார். அத்துடன் ஐந்தாவது முறையாக விம்பிள்டன் கிண்ணத்தை கைப்பற்றிய வீராங்கனை என்ற சிறப்பையும் அவர் பெற்றார்.

நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் மற்றும் போலந்து வீராங்கனை அக்னியாஸ்கா ரட்வன்ஸ்கா ஆகியோர் மோதினர்.

இதில் ஏற்கனவே நான்கு முறை கிண்ணம் வென்ற அனுபவத்தைப் பெற்ற செரீனா இம் முறை கிண்ணத்தை வெல்வார் என அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அதேவேளை, முதன் முறையாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற அக்னியாஸ்கா ரட்வன்ஸ்கா செரீனாவிற்கு கடும் நெருக்கடி கொடுத்து கிண்ணத்தை முதன் முறையாக கைப்பற்றுவார் என நம்பப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்டதுபோன்று முதல் செட்டை செரீனாவும், இரண்டாவது செட்டை ரட்வன்ஸ்காவும் கைப்பற்றி ஒருவருக் கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தினர். வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் தனது அனுபவங்களையும், சிறப்பான ஆட்டத் திறனையும் வெளிப்படுத்தி அந்தச் செட்டைக் கைப்பற்றினார் செரீனா. இறுதியில் 6-1, 5-7, 6-2 என்ற செட் கணக்கில் வென்று விம்பிள்டன் கிண்ணத்தை ஐந்தாவது முறையாக செரீனா கைப்பற்றினார்.

## பயங்கரவாத....

செய்யப்பட்டது. பஸ் வண்டியொன்று கிளைமோர் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி அதில் பயணம் செய்தவர்கள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டார்கள். 30 பேர் காயமடைந்தனர். இது சம்பந்தமாக தங்கவேலு நிமிலன் அல்லது செல்வம், நடேசன் குகராசன் அல்லது தென்றல் ஆகிய இருவரும் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது.

இவ்வழக்கு பாணந்துறை மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றச்சாட்டுப் பத்திரத்தில் பல தவறுகள் இடம்பெற்றுள்ளதாக 1ஆம் எதிரியின் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா சுட்டிக் காட்டினார். காயமடைந்தவர்களையும், மரணமடைந்தவர்களாகக் குறிப்பிட்டு குற்றச்சாட்டுக்கள் பல அமைந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குற்றச்சாட்டப் பத்திரத்தில் உள்ள தவறுகளை திருத்துவதற்காக அரச சட்டவாதி கிருஸ்ணா வர்ணகுல கால அவகாசம் கோரியதையடுத்து வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குற்றச் சாட்டுப் பத்திரத்தில் அரச தரப்பில் 74 சாட்சிகள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி கே.எம்.தில்லைநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி பி.நவராஜ் ஆஜரானார்.

அதேநேரம் குறித்த 2 எதிரிகளுக்கும் எதிராக 2007 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி இரத்மலானையில் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பில் 83 குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ளன. இச் சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்ததுடன், 33 நபர்கள் காயமடைந்தார்கள். தமிழில் இக்குற்றச் சாட்டுக்கள் எதிரிகளுக்கு வாசித்துக் காட்டியபோது தாங்கள் சுற்றவாளிகள் எனத் தெரிவித்தார்கள். இவ்வழக்கும் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.(137)

## கிழக்கு மாகாண...

என்றார். மேலும் அவ்வாறு எங்களது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் தேர்தலில் போட்டியிட்டால் தமிழரசுக்கட்சி என்ற ரீதியிலேயே போட்டியிட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் போட்டியிட ஏனைய கட்சிகள் அனுமதி வழங்காது.

நீண்டகாலமாக தமிழரசுக்கட்சியை வளர்ப்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அண்மையில் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதிலும் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் மட்டுமே உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதேபோன்று வன்னித் தொகுதியை உள்ளடக்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இளைஞர் அணியொன்றை நாங்கள் உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் கோரிக்கைகளை கட்சியின் தலைமைப்பீடங்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள் என்று எவ்வாறு நாங்கள் கூற முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.(02)

## நாடாளுமன்ற...

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்நோக்கில்

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத்திட்டத்தில் கூட்டமைப்பினர் இணைந்து கொள்வார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பினர் எப்போதும் கலந்து கொள்ள முடியும், அதற்கான கதவுகள் திறந்தே வைக்கப்பட்டுள்ளன.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்காலை ஒன்றையும் மாலையில் வேறு ஒன்றையும் தெரிவிக்கும் பழக்கத்தை உடையவர்கள்.

அண்மையில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பியகேள்விக்கு பதிலளித்த போது, கூட்டமைப் பினர் மாறுபட்ட நிலைப்பாடுகளை வெளியிட்டு வருவதாக கெஹலிய குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், தேசிய இனப்பிரச்சினைக்குதீர்வு காணும் முனைப்புக்களில் கூட்டமைப்பினர் பங்கேற்பார்கள் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தத்தால்....

பெரும்பான்மையான இடம் பெயர்ந்த மக்கள் வெளியுதவிகளைப் பெரிதும் எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக 147மில்லி யன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், கடந்த யூன் மாதம் வரையில் 25மில்லியன் அமெரிக்க டொலர்களே கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய நிலையான தீர்வு எதனையும் எட்டவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ச்சியாக உதவி வழங்கும் நிறுவனங்கள் உள்ளிட்ட வெளிச் சக்திகளின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

நீர் விநியோகம், நிலக்கண்ணிவெடிஅகற்றல், வீடமைப்பு போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பெருமளவு நிதிதேவைப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

உலக உணவுத் திட்டம் வடக்கில் 300,000பேருக்கு உதவிகளை வழங்கி வருவதாகவும், நிதிப் பற்றாக்குறை காரணமாக தொடர்ச்சியாக உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல உதவி வழங்கும்முகவர் நிறுவனங் கள் உதவிகளை குறைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிதிப் பற்றாக்குறைக்கு மேலதிகமாக வேறு சவால்களையும் எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் விசாக்களை நீடித்தல் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு வடக்கு மக்களுக்கு பெரிதும் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது

## காணி சுவீகரிப்....

நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டம் பிற்பகல் ஒரு மணி வரை நீடித்தது.

கடற்படையினரின் பாஸ் - அனுமதியின்றி கடலுக்குள் மீனவர்கள் இறங்க முடியாதுள் ளதால் தாம் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக மீனவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

கடல் நீர் மட்டம் குறைந்துள்ள, கோடையுடன் கூடிய காற்றுக் காலத்தில் மீனவர்கள் தமது கிராமங்களில் உள்ள துறையில் இருந்து கடற்படை யினரின் சோதனைச்சாவடி அமைந்துள்ள படகுத் துறைக்கு தமது மீன்பிடி படகுகளுடன் சென்று பாஸ்-அனுமதி பெற்ற பின்னரே கடலுக்குள் செல்ல முடியும் என்ற நிலை காணப்படுகிறது.

இதனால் உரிய நேரத்தில் தொழிலுக்குச் செல்ல முடியாதுள்ளதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, மன்னார், முள்ளிக்குளம் உள்ளிட்ட பல கிராமங்களில் இராணுவத்தினர் பொதுமக்களின் காணிகளில் இருப்பதனால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீள்குடியேறியும் சொந்தக் காணிகளில் குடியிருக்கவோ, சொந்தக் காணிகளில் விவசாயம் செய்யவோ முடியாதிருக்கின்றது.

எனவே, பொதுமக்களின் காணிகளை விட்டு இராணுவத்தினர் வெளியேறி இயல்பு வாழ்க்கைக்கு வழி செய்யவேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கடற்றொழிலுக்குச்...

கடம்பராசா, ஜெகதீஸ்வரன் இருவரும் தொழிலுக்காக கடலுக்குச் சென்றிருந்த நிலையில், மறுநாள் காலை வீடு திரும்பாத நிலையில், தொலைபேசி மூலம் வீட்டிற்குத் தொடர்புகொண்ட இவர்கள் தமது படகின் இயந்திரம் பழுதடைந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக அவர்களை மீட்பதற்கு சங்க அங்கத்தவர்கள் நால்வர் கடலுக்குச் சென்றனர். எனினும் கடற்பகுதியில் இவர்களை வழிமறித்த கடற்படையினர் தொழிலல்லாத நிலையில் கடலுக்குச் சென்றமை குறித்து விசாரணை நடத்தி அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில், நேற்றுக் காலை மீளவும் குறித்த இருவரும் தொலைபேசி மூலம் வீட்டாருடன் தொடர்பு கொண்டு இயந்திரம் பழுந்தடைந்த நிலையில் நிற்பதாக மீளவும் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை.

இதனிடையே நேற்று முன்தினம் மாலை தொழிலுக்குச் சென்ற அரசரத்தினம், பிரதாப் இருவரும் மறுநாள் கரை திரும்பவில்லை.

காணாமற்போன நால்வரையும் கண்டுபிடிக்க வடமராட்சி கடற்பகுதியில் கடற் படையினர் மற்றும் சக தொழிலாளர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் கடற்படையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (116)

## மற்றொரு...

நிலையில் நேற்றுக்காலை இந்தப் படகு கிறிஸ்மஸ்தீவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதனுடன் சேர்த்து கடந்த ஒரு மாதத்தில் மட்டும் அகதிகளை ஏற்றிய 25 படகுகள் அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்துள்ளன.

# தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டு ஓராண்டு கடந்த நிலையில் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கினால் அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என பிளேக் தனது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தெளிவான தீர்வுத் திட்டமொன்றை ஜனாதிபதி மகிந்த முன்வைக்கத் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான அதிகளவு குற்றச்சாட்டுக்களை விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட வேண்டும் என்ற போதிலும், அரசாங்கம் தீர்வு காண்பதில் முனைப்புகாட்டத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விவகாரங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் வாக்குறுதிகள் பல இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

உதாரணமாக பாடசாலைகளில் இரண்டு மொழிக்கல்வியை அமுல்ப்படுத்தும் திட்டம் அமுல்ப்படுத்தப்படவில்லை.

அரசியல்வாதி என்ற ரீதியில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சராசரியான புள்ளிகளையே வழங்கமுடியும்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது புத்திஜீவிகளும் கொழும்பு செல்வந்தபிரபுக்களும் அதிக விருப்பம் கொண்டிராத போதிலும், பெரும்பான்மை சிங்கள மககள் மரியாதை கொண்டுள்ளனா.

தென்பகுதி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூடுதல் சிரத்தை காடடிவருவதாக பிளேக், இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் சுட்டிககாட்டியுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

# மறைந்து வாழும் புலிகளால் நாட்டிற்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்தினரிடம் சரணடையாத விடுதலைப் புலி உறுப்பினர்கள் இன்னமும் மக்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களால் நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நாள் தோறும் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. சரணடையாதவர்கள் யார் யார் என்பது இன்னமும் புலனாகவில்லை. இவ்வாறு சரணடையாது மக்களுடன் மக்களாக புலி உறுப்பினர்கள் வாழ்ந்து வருவது நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இயங்கி வரும் சில அமைப்புக்கள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுவிஸ் பிரஜை மரணம்

வென்னப்புவ பகுதியில் இலங்கைப் பெண்ணுடன் வசித்து வந்த சுவிஸ் பிரஜையொருவர் (வயது-43) உயிரிழந்துள்ளார். இம் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

மேற்படி நபருடன் வசித்து வந்த பெண் இவரது மரணம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு வருகை தந்த சீன இராணுவ அதிகாரிகள் குழு

(கொழும்பு)

இராணுவ முக்கியத்துவம் கொண்ட விவகாரங்கள், வன்னியில் இராணுவம் மேற்கொண்ட போர் நடவடிக்கை மற்றும் இரு நாட்டு இராணுவங்களினதும் பயிற்சித் திட்டங்கள் குறித்து நேரில் ஆராய்யும் வகையில் ச்ன இராணுவ அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் மூத்த கேணல் சியாவோயி தலைமையிலான இந்தக் குழுவில் கேணல் ஹிசோயுஜின், கேணல் குவோஹொங்டாவோ, லெப்.கேணல் குய்சி பெங், லெப்.கேணல் பாங்ஹெங் ஆகிய ஐந்து அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய உள்ளிட்ட முக்கிய இராணுவத் தளபதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அத்துடன் பனாகொட இராணுவத் தலைமையகத்துக்கும் இவர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தலைமையிலான குழுவொன்று கடந்தமாத முற்பகுதியில் சீனாவுக்கு ஒரு வாரகாலப் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விமானப்படைக்கு இந்தியாவில் பயிற்சி வேண்டாம்

## என்கிறார் ஜெயலலிதா



இலங்கை விமானப் படை வீரர்களுக்கு இந்தியாவின் எந்த ஒரு இடத்திலும் பயிற்சி அளிக்கக்கூடாது எனவும் அவர்களை உடனே இலங்கைக்கே திருப்பி அனுப்பவேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக மக்களை அவமானப்படுத்தும் வகையில், இலங்கையின் 9 விமானப் படை வீரர்களுக்கு தமிழகத்திலுள்ள தாம்பரம் விமானப்படை நிலையத்தில் ஒன்பது மாதம் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்திருந்தேன்.

தமிழர்களின் உணர்வுகளை சற்றும் மதிக்காமல், தமிழர்களுக்கு எதிரான இந்த செயலை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தேன். தமிழகத்திலுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் இதே கருத்தைத் தெரிவித்திருந்தன. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இலங்கையின் ஒன்பது வீரர்களையும் பெங்களூரில் உள்ள எலகங்கா விமானப்படை நிலையத்தில் பயிற்சி அளிப்பதற்காக விமானம் மூலம் மத்திய அரசு வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளது. இதன் மூலம், தமிழர்களுக்கும் தமிழ் இனத்துக்கும் எதிராகச் செயல்படுபவர்களுக்கு சாதகமாக தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு செயல்படுகிறதோ என்ற எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இலங்கை விமானப்படை வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பதைத் தவிர்த்து விட்டு, பெங்களூரில் பயிற்சி அளிப்பதை தமிழர் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனத்[illegible]தரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா.வின் நிதி புலிகளுக்கு சென்றதா? சோதனை நடத்தப் பரிந்துரை

ஐக்கிய நாடுகள் சபையின் 1.57 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதி, விடுதலைப் புலிகளுக்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு இந்த நிதி அவர்களுக்கு வழங்கப்பட்டதாக கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மின்னஞ்சல் ஒன்றில் இருந்து இந்தத் தகவல் பெறப்பட்டதாக கூறப்படுகிறது. 2008 ஆம் ஆண்டு உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பிற்கு வழங்கப்பட்ட இந்த நிதி, மூன்று விநியோக நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுக்கு உரியதாக இருக்கலாம் என சந்தேகிககப்படுகிறது.

அத்துடன் இந்த நிதிக்கு என்ன நடந்ததது போன்ற விடயங்கள் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை

இது தொடர்பில், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பின் பிரதிநிதி பற்றிக் இவான்ஸை தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த நிதி குறித்த முழுமையான விசாரணைகள் இடம்பெறுவதாக தெரிவித்தார்.

எனினும் இந்த நிதி வீணடிக்கப்படவில்லை எனவும், முறையாக கையாளப்பட்டதாகவும், இதனைக் கொண்டு பெறப்பட்ட உணவுப்பொருட்கள் அனைத்தும், பயனாளிகளுக்கு சென்றடைந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் இந்த நிதி விடுதலைப் புலிகளுக்கு மாத்திரம் இன்றி, அரசாங்கத்தின் உயர் புள்ளிகளுக்கும் சென்றிருக்கலாம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த உணவுத் திட்டத்துடன் தொடர்புடைய அனைவரது வங்கிக் கணக்குகளையும் சோதனை இடவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்

பரீட்சைத் திணைக்களம் 24 மணிநேரமும் தொடர்புகளை மேற்கொள்வதற்கு வசதியாக தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 1911, 0112786200, 0112784201, 0112785202, 0112786205, 0112784206 மற்றும் 0112787207 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மதுபோதையில் வந்த குரு ஆலயத்தில் அட்டகாசம்

(பூநகரி)

பூநகரிப்பகுதியில், உள்ள சோபாலபிட்டி ஸ்ரீ சித்தி விநாயகா ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகத்தின்போது திரவிய ஓமகுண்டயாகம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வேறு ஒரு ஆலயத்தின் குரு ஒருவர் திடீரென ஆலயதினுள் பிரவேசித்து கிரியைகளில் ஈடுபட்டிருந்த குருவை தாக்கியுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள் இரவு 4 குருமார் யாகசாலையில் ஓமகுண்ட பூசையில் ஈடுபட்டிருந்தபோது ஆலயத்தின் வாசல் அருகே திடீரென வந்த வேறு ஆலயத்தில் பூசை செய்யும் குரு யாக பூசையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி நகரைச் சேர்ந்த குருவை தாக்கியுள்ளார். ஆலயத்தில் குழுமியிருந்த அடியார்கள் ஓடிச்சென்று மேலும் தாக்குதல் நடைபெறாமல் தடுத்தபோதும் மதுபோதையில் இருந்த குரு வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

உடனடியாக பூநகரி பொலிஸ் நிலையத்தில் நிர்வாகத்தினரால் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் குழுவினர் ஜீப்பில் விரைந்து ஆலயத்துக்கு வருகைதந்த போது பனை வடலிப்பகுதியில் மறைத்து நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. இச்சம்பவத்தால் ஆலய நிர்வாகிகளும் திரண்டிருந்த சைவ அடியார்களும் பெரும் கொதிப்படைந்துள்ளனர். (112)

# ஐந்து வருடம் காணாமற் போனவர் கோமா நிலையில் கண்டுபிடிப்பு

அனுராதபுரம் வைத்தியசாலையில் கோமா மயக்க நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞன் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னதாக காணாமல் போயிருந்தவரென கண்டறியப்பட்டுள்ளது. மன்னார் இலுப்பக்கடவையினை சேர்ந்த முத்துராசா தில்ருக்ஸன் (வயது-28) என அவர் அடையாளங்காணப்பட்டுள்ளார். நேற்று அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நேரில் விஜயம் செய்திருந்த தில்ருக்ஸனின் பெற்றோர் அவரை அடையாளம் கண்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டில் வெளிநாடு செல்வதற்கென கொழும்பு நோக்கி புறப்பட்டு சென்றிருந்தவேளை இவர் காணாமல் போயிருந்தார். இந்நிலையில் காணாமல்போன தமது பிள்ளையினை பெற்றோர் பல இடங்களிலும் தேடி திரிந்த நிலையில் பின்னர் நம்பிக்கையிழந்து தமது மகனைக் கண்டுபிடிக்கும் தேடுதலை கைவிட்டிருந்தனர். இந்நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் கோமா மயக்க நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞன் ஒருவன் தொடர்பாக தகவல்கள் செய்திகளில் வெளியாகியிருந்தது. இதையடுத்தே நேற்றைய தினம் அவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்ட வேளையிலேயே காணாமல் போன தமது பிள்ளையினை கண்டுபிடித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.